வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 06 25.05.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 146 பக்கங்கள் : 16

## வைத்தியசாலைகளில் நெருக்கடி கடந்தகால அரசுகளே காரணம்!

### அநுரகுமார அரசாங்கம் குற்றச்சாட்டு



கொழும்பு, மே 25

**கடந்த அரசாங்கத்தின் விளைவுகளால் நோயாளர்கள் இன்று அவதிப்படுகின்றனர் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். இதனால்தான் இன்று வைத்தியசாலைகளில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.**

தாதியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள 3 ஆயிரத்து 147 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 65 வீதமானவை இறக்குமதி செய்யப்படுவதுடன், 35 வீதமானவையே நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. 15

## 16 ஆண்டுகளின் பின்னர் சிக்குன்குனியா தீவிரம்!

கொழும்பு, மே 25

இலங்கையில் சுமார் 16 ஆண்டுகளுக்குப் பிறகு சிக்குன்குனியா வைரஸ் நோய் பெரிய அளவில் பரவி வருகிறது. ஒக்ஸ்போர்ட் நானோபோர் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட மரபணு ஆராய்ச்சியில் இவ்விடயம் வெளிப்பட்டுள்ளதாக பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

தற்போது பரவி வரும் சிக்குன்குனியா வைரஸ் இந்து சமுத்திரத்தில் பரவக் கூடிய வைரஸ் பரம்பரையை சேர்ந்தது. இது பல தனித்துவமான பிறழ்வுகளுடன் 15

## உப்பு ரூ. 150

கொழும்பு, மே 25

தற்போதைய உப்புப் பற்றாக்குறையால் இறக்குமதி செய்யப்படும் உப்பு ஒரு கிலோகிராம் மொத்த விலையாக 150 ரூபாய்க்கு விற்கப்படும் என்று வர்த்தகம், வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஜூன் 10 ஆம் திகதிக்குள் 30 ஆயிரம் மெற்றிக் 15

## ஜனாதிபதியின் ஜேர்மனி விஜயத்தின்போது பயங்கரவாத சட்டத்தை நீக்க அழுத்தம்?

கொழும்பு, மே 25

ஜேர்மனிக்கான ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் விஜயத்தின் போது இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்தும், நல்லிணக்கம் மற்றும் யுத்தகால அநீதிகளுக்கு பொறுப்புக் கூறல் குறித்தும் அந்த நாடு கேள்வி எழுப்பும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜேர்மனி, ஏனைய மேற்குலக நாடுகள்போல பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என நீண்ட காலமாக வேண்டுகோள் விடுத்துவருகின்றது.

இந்நிலையில் ஜூன் 11ஆம் திகதி ஜேர்மனிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதியிடம் பயங்கரவாத தடை சட்ட நீக்கம், நல்லிணக்கம், 15

## இந்த அரசையும் மக்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள்

### கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, மே 25

இந்த அரசாங்கத்தையும் மக்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2026 மே 24ஆம் திகதிக்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்களே அவர்களை வீட்டுக்கு அனுப்புவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தாம் கூறிய பல எதிர்வுகூறல்கள் பலித்துள்ளன என்றும் இந்த அரசாங்கம் விரைவில் வீட்டுக்கு போகும் என்ற எதிர்வுகூறலும் நிச்சயம் பலிக்கும் எனவும் அவர் கூறினார். 15

## மூவின மக்கள் உருவாக்கிய அரசை சூழ்ச்சிகளினால் கவிழ்க்கமுடியாது!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, மே. 25

மூவின மக்களாலும் உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எந்தவொரு சூழ்ச்சியாலும், வதந்தி செய்திகளாலும் கவிழ்க்க முடியாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுக்குள் குழப்பம் என்றும், பிரதமர் தலைமையிலான ஒரு குழு அரசில் இருந்து வெளியேறுகின்றது என்றும், அநுரவின் ஆட்சி கவிழப் போகின்றது என்றும் தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் கருத்துரைக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


இது ஜனநாயக நாடு. மக்கள் ஆணையை மீறி எவரும் நடக்க முடியாது. மக்களை ஏமாற்றி எவரும் அரசியல் பிழைப்பு நடத்த முடியாது. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து 15

## உகந்தைமலை கடற்கரை சூழலில் புதிதாக முளைத்த புத்தர் சிலை

காரைதீவு, மே 25

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை சிறீ முருகன் ஆலய கடற்கரை சூழலில் உள்ள குன்றில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அங்கு பௌத்த கொடியும் பறக்க விடப்பட்டுள்ளது.

உகந்தை மலை ஆலய தீர்த்தக் கடற்கரையில் - கடற்படை முகாமுக்கு அருகே உள்ள குன்றிலேயே குறித்த புத்தர்



சிலை வைக்கப்பட்டுள்ளது.

"உகந்தைமலையில் நாங்கள் முருகன் சிலையொன்றை நிறுவ 15

## வினைத்திறனை அதிகரிக்க அமைச்சரவையில் மாற்றம்!

கொழும்பு, மே 25

அமைச்சரவையில் சில மாற்றங்களைச் செய்வது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அறிய முடிகிறது.

அமைச்சுகள் மற்றும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட ஏனைய அரச கட்டமைப்புகளின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் இந்த மாற்றத்தை மேற்கொள்ள 15

## நீர்கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவில் குழப்பம்

கொழும்பு, மே 25

நீர்கொழும்பில் கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் குழப்ப நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள ராவய அமைப்பை சேர்ந்த சிலர் அங்கு கூடி தேசியக் கொடிகளை தாங்கியவாறு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை குழப்பும் விதமாக கோசங்களை எழுப்பி எதிர்ப்பில் ஈடுபட்டனர். 15

## கொழும்பு மாநகர சபையை நாங்களே ஆட்சி செய்வோம்

### தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மே 25

தேசிய மக்கள் சக்தியே கொழும்பு மாநகர சபையை ஆட்சி செய்யும் என அக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், ஜே.வி.பியின் பொதுச்செயலாளருமான ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஆசிரியராகக் கடமையாற்றிய காலமே என் வாழ்வில் பொற்காலம்

## வட மாகாண ஆளுநர் வேதநாயகன்



முல்லைத்தீவு, மே 25

நான் நான்கு மாவட்டங்களில் மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய காலத்தைவிட 4 ஆண்டுகள் இரசாயனவியல் ஆசிரியராகக் கடமையாற்றிய காலமே என் வாழ்வில் பொற்காலம். இன்றும் மறக்க முடியாத காலம். என்னிடம் கற்ற மாணவர்கள் உயர் பதவிகளில் இருப்பதைப்பார்க்கும் போது பெருமையாக இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியின் வைர விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் இந்த வைரவிழாவில் ஆளுநராகக் கலந்துகொள்வதிலும் பார்க்க முன்னாள் ஆசிரியர் என்ற வகையில் பங்கேற்பதையே பெருமையாகக் கருதுகின்றேன். அந்தக் காலத்தில் என்னுடன் விடுதிகளில் ஒன்றாக தங்கியிருந்து கற்பித்த சக ஆசிரிய நண்பர்கள் இருக்கின்றார்கள். நாங்கள் அன்றைய நாள்களில் பாடசாலை நிறைவடைந்த பின்னர் போட்டி போட்டுக்கொண்டு மேலதிக வகுப்புகளை மாணவர்களுக்கு எடுத்தோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்து தங்கி நின்று கற்பித்து சனிக்கிழமை காலையிலிருந்து இங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று மீண்டும் ஞாயிறு இங்கு திரும்பவேண்டும். அன்றைய சூழலில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலம். யாழ்ப்பாணம் சென்று வருவதில் பெரும் நெருக்கடிகளையும், சோதனைகளையும் எதிர்கொண்டிருந்தேன். ஒரு தடவை பாடசாலை மாணவர்களுடன் சேர்ந்து நாங்கள் ஆசிரியர்களும் ஷெல் தாக்குதல் காரணமாக இடம் பெயர்ந்து ஓடினோம். அத்தகைய பயங்கரமான சூழலில் கற்பித்திருந்தாலும் அது என்றும் மறக்க முடியாத பொற்காலம்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் மிகக் குறுகிய காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதனிலை பாடசாலையாக வளர்ந்திருக்கின்றது. அதற்கு இந்தப் பாடசாலைக்கு தலைமைத்துவம் வழங்கியவர்கள், ஒத்துழைப்பு வழங்கியவர்கள் தான் காரணம்.

எந்தவொரு நிறுவனமும் வளர்ச்சியடைவதும் பின்னோக்கிச் செல்வதும் அதன் தலைமைத்துவத்தில்தான் தங்கியிருக்கின்றது. எங்கு தலைமைத்துவம் பிழையாகப்போகின்றதோ அங்கு சரிவு ஆரம்பிக்கின்றது. அதைப்போல வெளிப்படைத் தன்மையும் முக்கியம். எவரும் நம்பிக்கை வைத்துச் செயல்படக்கூடிய நிறுவனமாக இருக்கவேண்டும். பாடசாலை அதிபர் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதால்தான் அவர் மீது நம்பிக்கை வைத்து பழைய மாணவர்களும் உதவிகளைச் செய்கின்றனர்.

இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் புலம்பெயர் தேசங்களிலிருந்து இங்கு கைகொடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களால் தான் இன்று இந்த நிலைமைக்கு வளர்ச்சியடையக் கூடியதாக உள்ளது. மருத்துவர் விமல் ஜெயரட்ணம் இந்தப் பாடசாலையுடன் நேரடித் தொடர்புடையவராக இல்லாதபோதும் அவர் பல்வேறு உதவிகளைச் செய்திருக்கின்றார். அவருக்கு பாடசாலைச் சமூகமும், ஊர் மக்களும் இணைந்து கௌரவிப்பு நிகழ்வு நடத்தவேண்டும்.

நான் இந்தப் பாடசாலைக்கு ஆசிரியராக ஆரம்பத்தில் நியமிக்கப்படவில்லை. புதுக்குடியிருப்புக்கே எனது நியமனம் கிடைத்தது. இந்தப் பாடசாலைக்கு இரசாயனவியல் ஆசிரியராக நியமிக்கப்பட்டவர் பதவியேற்க தாமதமாகும் என்பதால் நானாக விரும்பிக்கேட்டு இங்கு வந்தேன். இரண்டு வருடங்களில் அவர் இங்கு வர விரும்பிய போதும் நான் இந்தப் பாடசாலையை விட்டுச் செல்ல விரும்பவில்லை. என்னோடு கற்பித்த ஆசிரியர்கள், என்னிடம் படித்த அந்தப் பண்பான மாணவர்கள், இந்தச் சமூகத்தைவிட்டுச் செல்வதற்கு எனக்கு மனம்வரவில்லை.

இப்போது ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு தினமும் வந்து செல்கின்றார்கள். அதன் ஊடாக ஆரோக்கியமான மாணவர் சமூகத்தை அவர்களால் உருவாக்க முடியாது. இங்கு தங்கியிருந்து சேவையாற்றவேண்டும். இப்போதும் ஆசிரிய இடமாற்றங்கள்தான் எங்களுக்கு சவாலாக இருக்கின்றன. யாழ்ப்பாணத்திலிருந்தே ஆசிரியர்கள் இங்கு வருகின்றார்கள்.

இந்தப் பிரதேசத்திலிருந்தே எதிர்காலத்தில் ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள், கணக்காளர், இலங்கை நிர்வாகசேவை அதிகாரிகள், திட்டமிடல் பணிப்பாளர்கள் உருவாகவேண்டும். மாணவர்களுக்கு அதற்குரிய வகையில் தலைமைத்துவ பண்புகளுடன் வளர்க்கவேண்டும்.

மாணவர்களே நீங்கள் மற்றையவர்களுக்கு உதவும் சிந்தனையை வளர்த்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் மற்றவர்களால் மதிக்கப்படுவீர்கள். உயர் பதவிகளுக்குச் செல்லும்போது உங்களுக்கு பணிவு வேண்டும். மக்களுக்காக சேவையாற்ற வேண்டும்"- என்றார். (எ)

# மாகாண சபை தேர்தலை நடத்த அமைச்சுமட்ட நடவடிக்கைகள்

## அமைச்சர் சந்தன அபேரத்ன தகவல்

கொழும்பு, மே 25

தொழில்நுட்ப ரீதியாக மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு அமைச்சார் மட்டத்தில் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகள் தேர்தலை நடத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் சட்ட ரீதியான ஒரு சில தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். ஆகவே இதற்கமைய அமைச்சு மட்டத்தில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் அமைச்சுசார் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன- என்றார். (எ)

# மாணவியின் வீட்டுக்கு சென்ற அதிபர், ஆசிரியர்மீது வாள்வெட்டு

அக்கரைப்பற்று, மே 25

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள ஆலையடிவேம்பு பிரதேசத்தில் ஆசிரியர் மற்றும் அதிபர் ஆகியோர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் விசேட பயிற்சி செயலமர்வு தொடர்பில் பாடசாலை மாணவி ஒருவருக்கு அறிவிப்பதற்காக அவரது வீட்டுக்குச் சென்ற ஆசிரியர் மற்றும் அதிபரே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள பாடசாலையில் கல்வி கற்றுவரும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு விசேட பயிற்சி செயலமர்வு ஒன்று தம்பட்டை பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசேட பயிற்சி செயலமர்வுக்கு செல்வதற்கு மாணவர்களை சிறீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலைக்கு முன்னால் ஒன்றுகூடுமாறு, அதிபரின் உத்தரவுக்கமைய மாணவர்களின் வீட்டுக்கு சென்று அறிவிப்பதற்காக சம்பவதினம் குறித்த ஆசிரியர், மாணவி ஒருவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இந்த நிலையில் குறித்த மாணவிக்கு அறிவித்துவிட்டு அங்கிருந்து வெளியேற முற்பட்ட ஆசிரியரை மாணவியின் சகோதரன் வாளால் வெட்டித் தாக்கியதுடன் மோட்டார் சைக்கிளை அடித்து உடைத்துள்ளார்.

ஆசிரியர் தனக்கு நேர்ந்த கதியை அதிபருக்கு தெரிவித்ததையடுத்து அதிபர் அங்கு சென்று ஆசிரியரை காப்பாற்ற முற்பட்டபோது அவர்மீதும் மாணவியின் சகோதரன் வாள் வெட்டு தாக்குதல் மேற்கொண்டதுடன் அவரது மோட்டார் சைக்கிளையும் அடித்து உடைத்துள்ளார்.

இதனையடுத்து வாள்வெட்டு தாக்குதலில் படுகாயமடைந்த ஆசிரியர், அதிபர் ஆகிய இருவரும் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவரை கைது செய்துள்ளதாகவும் அவர் மதுபோதையில் இருந்தாரெனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலய பெருந்திருவிழா; கொடிச்சீலை உபயகாரருக்கு காளாஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம், மே 25

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை உபயகாரர்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்திலும் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.



அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வரர் ஆலயத்துக்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் செங்குந்த மரபுடையவர்களுக்கான காளாஞ்சி எடுத்துச் செல்லப்பட்டு திருநெல்வேலி கெண்டடி வீதியில் உள்ள சண்முகநாதன் கபிலன் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆலய திருப்பணிச் சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் 30ஆம் திகதி பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கப்படவுள்ளது. (எ)

# இலஞ்ச பணத்தை கூட்டாக பங்கிடும் அரச அதிகாரிகள்

கொழும்பு, மே 25

பல அரச நிறுவனங்களில் இலஞ்ச பணத்தை கூட்டாக பங்கிடுகின்றனர் என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.


பல அரச நிறுவனங்கள் திட்டமிட்ட முறையில் இலஞ்ச ஊழலில் ஈடுபடுவது குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரச திணைக்களங்களில் உள்ள அநேக நபர்களின் ஆதரவுடனேயே இது இடம்பெறுகின்றது என இலஞ்ச ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸநாயக்க தெரிவித்தார்.

இலஞ்சமாக பெற்ற பணத்தை இலஞ்சம் பெறுவதுடன் தொடர்புபட்ட அந்த திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களும் பங்கிட்டுக்கொள்கின்றனர். இது தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்தில் விசேட சோதனையில் ஈடுபட்டதாக அவர் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கருணாதிலக




கொழும்பு, மே 25

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக ஐ. எம். கருணாதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமன கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

# பெருந்தொகை பணத்துடன் 8 பேர் பொலிஸாரால் கைது



கொழும்பு, மே 25

டுபாயிலிருந்து இயக்கப்படும் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பு தொடர்பான பல தகவல்களுடன் 18 மில்லியன் ரூபாய் பணத்தை தொடுவாவை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கடல் வழியாக போதைப்பொருள் தொகையை கொண்டு வந்த குழுவுக்கு இந்த பணம் வழங்கப்படவிருந்ததாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 8 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மாரவில, தொடுவாவை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு மஹவெவ, சிவிராஜ மாவத்தையில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கிடமான ஓட்டோ ஒன்றை சோதனை செய்தனர்.

அப்போது, ஓட்டோவில் இருந்த கறுப்பு நிற பயணப் பையை பரிசோதித்தபோது, அதில் பெருந்தொகையான பணம் இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

உடனடியாக செயல்பட்ட பொலிஸ் அதிகாரிகள், ஓட்டோவில் இருந்த இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

சந்தேக நபர்களிடம் விசாரணை செய்தபோது, கடந்த 19ஆம் திகதி பேருவளை அருகே கடலில் சுமார் 300 கிலோ கிராம் போதைப்பொருள் தொகை பலநாள் மீன்பிடி படகு மூலம் இலங்கைக்கு கொண்டு வந்தமை தெரியவந்துள்ளது.

அந்த படகிலிருந்த 6 பேருக்கு தலா 30 இலட்சம் ரூபாய் வீதம் பணம் வழங்குவதற்காக இந்த பணம் கொண்டு செல்லப்பட்டதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு போதைப் பொருளை கொண்டு வருவதற்கு முன்னர், கடத்தல்காரர்கள் பலநாள் மீன்பிடி படகுக்கு 70 இலட்சம் ரூபாய் வழங்கியிருந்தனர்.

ஓட்டோவில் பணத்தை கொண்டு வந்த நபரும் பல நாள் மீன்பிடி படகு ஒன்றின் உரிமையாளராவார். முன்னதாக, 100 கிலோ கிராம் போதைப்பொருளுடன் இந்திய பாதுகாப்புப் பிரிவினரால் இந்த படகு கைப்பற்றப்பட்டிருந்ததாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவின் மேற்பார்வையின் கீழ், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ். ஏ. பி. பிரியந்தவின் வழிகாட்டலின் பேரில், பலநாள் மீன்பிடி படகின் ஓட்டுநர் மற்றும் இரு பெண்கள் உட்பட மேலும் 6 சந்தேக நபர்களை, சந்தேகத்துக்கிடமான ஓட்டோவுக்கு பாதுகாப்பு வழங்கிய மோட்டார் சைக்கிளுடன் கைது செய்தனர்.

டுபாயிலிருந்து இயக்கப்படும் இந்த போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய இலங்கையைச் சேர்ந்த நபர்கள் சிலாபம், தொடுவாவை, நீர்கொழும்பு, மாத்தறை ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது. (எ)

# இலங்கையில் நிகழ்ந்தவற்றை காசா நினைவுபடுத்துகின்றது

## ஐ. நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலர்

நியூயோர்க், மே 25

**காசாவில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல் இலங்கை உட்பட பல நாடுகளில் நிகழ்ந்த சம்பவங்களை நினைவுபடுத்துகின்றன. இனப்படுகொலையை தடுத்து நிறுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் - என்று ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் டொம் பிளெச்சர் வலியுறுத்தியுள்ளார்.**



ஐ. நா. பாதுகாப்பு சபையில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்த அவர், காசாவில் அழிவின் அளவு குறித்து கடும் எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன், இலங்கை உட்பட நாடுகள் சிலவற்றில் இடம்பெற்ற அட்டூழியங்களை சர்வதேச சமூகம் தடுக்க தவறியதை காசா நிலைமையுடன் ஒப்பிட்டார்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மனித உரிமைகள் மீறல் பெருமளவில் மீறப்பட்ட முன்னைய சந்தர்ப்பங்களில் ஐ. நா. செயல்பட்ட விதம் குறித்த முந்தைய மீளாய்வுகளில் மியன்மார், இலங்கை, ருவாண்டா போன்ற நாடுகளில் இழைக்கப்பட்ட மீறல்களின் அளவு குறித்து ஐ. நா. பேசத்தவறியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, கொல்லப்பட்டவர்களுக்கும் மௌனமாக்கப்பட்டவர்களுக்கும் என்ன ஆதாரங்கள் தேவை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்?

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேல் வேண்டுமென்று வெட்கமற்று மனிதாபிமானமற்ற நிலைமையை உருவாக்குகிறது - என்றும் அவர் சாடினார். (ஐ)

# இலஞ்சம் பெற்ற மூவருக்கும் மறியல்

கொழும்பு, மே 25

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஒருவர் உட்பட மூன்று அதிகாரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இலஞ்சமாக பெற்றதாக நம்பப்படும் 40 இலட்சம் ரூபாய் பணத்தை வைத்திருந்தமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

# உலக அழகி போட்டி; இறுதிச்சுற்றில் அனுதி



கொழும்பு, மே 25

72ஆவது உலக அழகிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு இலங்கையைச் சேர்ந்த அனுதி குணசேகர தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் தெலுங்கானாவில் நடைபெறும் இந்தப் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு 24 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அனுதி குணசேகர அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சிறைச்சாலையில் தகராறு

# அதிரடிப் படையினர் இருவர் மருத்துவமனையில் அனுமதி

கொழும்பு, மே 25

பூஸா சிறைச்சாலையில் ஏற்பட்ட தகராறில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த புரு முனா என்று அழைக்கப்படும் ரவிந்து சங்க த சில்வா ஹேவத் என்பவரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புரு முனா என்பவருக்கும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

புரு முனாவுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணையை காணொலி அழைப்பு ஊடாக மேற்கொள்வதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கும்போதே இந்தத் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின் போது புரு முனா மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் இருவர் காயமடைந்து கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# ஹஜ் பெருநாளை முன்னிட்டு பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, மே 25

புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு எதிர்வரும் 06.06.2025 வெள்ளிக்கிழமை மற்றும் 09.06.2025 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் நாட்டிலுள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி மற்றும் தேசிய ஒருமைப் [illegible] பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் ஆகியோரின் கோரிக்கைக்கு அமைவாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தினங்களுக்கு பதிலாக நாளை 26 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் பாடசாலை நடத்தப்பட வேண்டும் என்பதுடன் முஸ்லிம் பாடசாலைகளுக்கான விடுமுறை 26 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# மாட்டிறைச்சியுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 25

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில், மாட்டு இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுமதி இன்றி, ஒரு தொகை மாட்டு இறைச்சியை ஓட்டோவில் மருதங்கேணி - புதுக்காட்டு வீதியூடாக செம்பியன் பற்றுப் பகுதிக்கு கொண்டு செல்ல முயற்சித்தவேளை, பொலிஸாரால், மருதங்கேணி பொதுச் சந்தை முன்பாக நேற்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபர், நாகர்கோவியிலை சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவில் பேருந்து விபத்து 20 பேர் காயம்

ஹற்றன், மே 25

நுவரெலியாவில் தனியார் பேருந்து ஒன்று நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 20 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விபத்தில் இளைஞர் பலி

கம்பஹா, மே 25

பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கம்பஹா - மல்வத்து ஹிரிபிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யக்கல - கிரிந்திவெல வீதியில் வாரபலான பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பலத்த காயமடைந்து கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# அரசமைப்பு பேரவையுடன் முரண்படும் அரசாங்கம்!

கொழும்பு, மே 25

**திருடர்களை பிடிப்பதாக குறிப்பிட்ட அரசாங்கம் தலைமை கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனத்தில் அரசமைப்பு பேரவையுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.**

தலைமை கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு சிரேஷ்டத்துவம் மற்றும் தகைமையுடன் கணக்காய்வாளர் திணைக்களத்தில் ஒருவர் உள்ள நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றும் ஒருவரை பல்கலைக்கழக நண்பர் என்ற காரணத்தால் எவ்வாறு நியமிக்க முடியும். நாட்டு மக்கள் இந்த மாற்றத்தையா எதிர்பார்த்தார்கள் காவிந்த எம். பி. கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட இரண்டு சட்டமூலங்களை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளதை வரவேற்கிறோம். சட்டங்கள் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் இயற்றப்படுகிறது. ஆகவே சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம்.

பாராளுமன்றத்தின் கோப் குழு, கோபா குழு மற்றும் அரச நிறுவனங்களின் கணக்காய்வு விவகாரத்தில் கணக்காய்வாளர் திணைக்களத்தின் வகிபாகம் இன்றியமையாதது. கணக்காய்வு திணைக்களத்தின் சுயாதீனத் தன்மை தலைமை கணக்காய்வாளர் நாயகத்திடம் உள்ளது. தலைமை கணக்காய்வாளர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில் புதிய கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பது தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ,கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சியில் குடும்பத்தார் மற்றும் நண்பர்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்பட்டதாகவும் அதனால் பெரும் மோசடிகள் இடம்பெற்றதாகவும் ஆளும் தரப்பினர் குற்றஞ்சாட்டினர். தற்போது இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றும் காவிந்த எம்.பி. கேள்வி எழுப்பினார். (எ)

# இலங்கை சினிமாவின் ராணி மாலினி பொன்சேகா மறைவு



கொழும்பு, மே 25

சிங்கள திரையுலகின் பிரபல நடிகையான மாலினி பொன்சேகா நேற்று சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மாலினி பொன்சேகா காலமானார்.

உயிரிழக்கும் போது அவருக்கு வயது 76.

சுமார் 70 வருடங்களுக்கு மேலாக நாட்டின் கலை மற்றும் சினிமாவில் மிகவும் மதிக்கப்படும் செல்வாக்குமிக்க நபர்களில் ஒருவராக காணப்பட்ட மாலினி பொன்சேகா, இலங்கை சினிமாவின் ராணி என அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சுமண ரத்ன தேரருக்கு பிணை



மட்டக்களப்பு, மே 25

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்ப நிலைமையை தோற்றுவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அம்பிட்டி சுமண ரத்ன தேரர், இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டத்தின் பண்டாரடுவ பொலிஸ் நிலையத்துக்குள் உட்புகுந்து மட்டக்களப்பு மங்களராம விகாரையின் விகாராதிபதி சுமண ரத்ன தேரர், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் அம்பாறை மாவட்ட பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் தேரரை முற்படுத்திய போது பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தேரரின் உறவு முறையான நபரின் இரண்டு பிள்ளைகள் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது பொலிஸார் மோட்டார் சைக்கிளை சோதனை செய்தனர். பின்னர் 2 பிள்ளைகளின் தந்தை அங்கு திடீரென மயக்கமடைந்ததால் அவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் இரண்டு பிள்ளைகளையும் அவ்வீதியால் வந்த ஓட்டோவில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பினர். மேலும் இரண்டு பிள்ளைகளும் சரியான நேரத்தில் வீடு திரும்பாததால் சுமண ரத்ன தேரர் இரண்டு பிள்ளைகளையும் கேட்டு விசாரிப்பதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் சென்றதுடன் அங்கு பிள்ளைகளை அடையாளம் தெரியாத ஓட்டோ சாரதியிடம் ஒப்படைத்த பொலிஸ் அதிகாரிகளை திட்டியுள்ளார்.

பின்னர் சுமண ரத்ன தேரர் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்ப நிலைமையை தோற்றுவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ)

# பகிடிவதையை எதிர்த்த மாணவியை தாக்கியவர் கைது

ஏறாவூர், மே 25

கிழக்கு பல்கலைக்கழகத்தில் புதிதாக பல்கலைக்கழகம் வரும் மாணவர்களை பகிடிவதை செய்ய வேண்டாமென தெரிவித்த சக பல்கலைக்கழக மாணவியின் கன்னத்தில் அறைந்த மாணவனை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்தில் 3ஆம் ஆண்டில் கல்வி கற்று வரும் மாணவர்கள் புதிதாக பல்கலைக்கழகம் வரும் மாணவர்களை பகிடிவதை செய்துள்ளனர்.

இது தொடர்பில் இடம்பெற்ற வாக்குவாதத்தின் போது மாணவி ஒருவர் பகிடிவதை செய்ய வேண்டாமென தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சக மாணவன் ஒருவர் மாணவியை கன்னத்தில் தாக்கியதில் மாணவி காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மாணவியை தாக்கிய மாணவனை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மாணவனை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவின் நடத்தைகள் குறித்து விசாரியுங்கள்!

## எதிர்க்கட்சி எம். பிக்கள் சபாநாயகரிடம் கோரிக்கை

கொழும்பு, மே 25

சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகள் கடந்த கால சபை முதல்வர்களின் நன்நடத்தைக்கு முற்றிலும் விரோதமானது என்று குறிப்பிட்டு 2025. 05. 20 ஆம் திகதியன்று சபை முதல்வர் நடந்துக் கொண்ட விதம் குறித்து விசாரணை செய்யுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சபாநாயகரிடம் எழுத்துமூலமாக வலியுறுத்தியுள்ளனர்.

சபாநாயகரிடம் நேற்று முன்தினம் முன்வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 20 ஆம் திகதியன்று நிலையியல் கட்டளை பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் சபாநாயகரின் அனுமதியுடன் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய ஆளும் தரப்பின் உறுப்பினர் கௌசல்யா ஆரியரத்ன, சபாநாயகர் வழங்கிய அனுமதி மற்றும் நிலையியல் கட்டளையை கேள்விக்கு உட்படுத்தினார். இந்தச் சந்தர்ப்பத்தில் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தகாத வார்த்தைகளை பிரயோகித்து தயாசிறி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உரையாற்றினார். இவரது கூற்றுக்கள் நிலையியல் கட்டளைக்கு முரணானது.

10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பமான தினத்திலிருந்து சபை முதல்வரின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகள் கடந்த கால பாராளுமன்றத்தின் சபை முதல்வரின் நன்நடத்தைகளுக்கு முற்றிலும் விரோதமானது. ஆகவே, சபை முதல்வர் சபையில் நடந்துக் கொண்ட விதம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுங்கள்- என்று வலியுறுத்தியுள்ளனர். (எ)

# 270 போதை மாத்திரைகளுடன் யாழில் இரு இளைஞர்கள் கைது



யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணத்தில் 270 போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சமன் பிரேமதிலகவின் வழிநடத்தலின் கீழ் உபபொலிஸ் பரிசோதகர் நந்தகுமாரின் தலைமையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் 18 மற்றும் 24 வயது மதிக்கத்தக்கவர்கள் எனவும் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
25.05.2025 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 11

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மாகாண சபைத் தேர்தல்

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் அலையை சரித்திருப்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றது. அரசியல் அலை என்பது, எப்போதுமே நிரந்தரமான ஒன்றல்ல என்பது உண்மையாயினும் கூட, மிகவும் குறுகிய காலத்தில் உள்ளூராட்சி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்பாராதளவுக்கு வாக்குகளை இழந்திருப்பதும் உண்மை.

ஆனால், இலங்கை அரசியலில் தேசிய மக்கள் சக்தியை, ஒரு தனிக்கட்சியாக எதிர்க்கக்கூடிய பலத்தோடு எந்தவொரு கட்சியும் இல்லை என்பதும் உண்மை. வாக்குகள் சரிந்திருந்தாலும்கூட, பிரதான அரசியல் சக்தி என்னும் நிலையிலிருந்து தேசிய மக்கள் சக்தி பின்னுக்குச் செல்லவில்லை. இந்த நிலையில் மாகாண சபைகள் தேர்தலை அநுர அரசாங்கம் நடத்துமா என்னும் கேள்வி எழுந்திருக்கிறது.

இது தொடர்பிலான சந்தேகங்களில் நியாயமுண்டு. மாகாண சபைகள் தேர்தல் நடைபெற்றால் அதில் பிரதான சக்தியாக தாங்கள் வரமுடியுமா என்பதில் தேசிய மக்கள் சக்தி சந்தேகம் கொண்டால், தேர்தலை பின்னுக்குத் தள்ள முயற்சிக்கலாம். ஜே.வி.பி. அடிப்படையில் மாகாண சபை முறைமை பற்றி மாறுபாடான நிலைப்பாட்டை கொண்டிருந்தாலும்கூட, மாகாண சபைகள் தேர்தலிலும் பங்கு கொண்டு, தங்களை பலப்படுத்திக் கொள்ள முயற்சித்த ஒரு கட்சிதான். இந்த அடிப்படையில் நோக்கினால், மாகாண சபை முறைமை தவிர்க்க முடியாதளவுக்கு இலங்கையின் அரசியலில் ஓர் அங்கமாகிவிட்டது.

மாகாண சபை முறைமையின் முழுமையான அமுலாக்கம் தொடர்பில் முரண்பாடுகள் இருந்தாலும்கூட, மாகாண சபையை பயன்படுத்துவதில் ஜே.வி.பி. முரண்பட்டதில்லை. இந்த நிலையில் இலங்கையின் மாகாண சபைகள் அனைத்தையும் தங்கள் வசம் கொண்டுவருவதற்கான வாய்ப்புகள் இருந்தால் தேர்தலை நடத்துவதில் அவர்கள் பின்நிற்கப் போவதில்லை. ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் நோக்கினால், சற்று யோசிக்க - அச்சப்பட வாய்ப்புண்டு.

இந்த நிலையில் தமிழ் கட்சிகள் என்ன செய்ய வேண்டும்? 13ஆவது திருத்தச்சட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம், அது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியும் இல்லை - இப்படியான வாய்ப்பாட்டு அரசியலுக்கு மாறாக, தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து மாகாண சபைகள் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், அதனை இனியும் பிற்போடக் கூடாது என்னுமடிப்படையில் அரசாங்கத்தை நோக்கியும் கொழும்பிலுள்ள இராஜதந்திர மட்டத்தினரை நோக்கியும் ஒரேகுரலில் கோர வேண்டும். ஏனெனில், மாகாண சபைகள் தேவையானவர்கள்தான் அதற்காக ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் - மாறாக, அதனை பலவீனப்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்தோடு இருக்கும் கொழும்பின் அதிகார அடுக்குகள் மாகாண சபைகள் தேர்தலை முடிந்தவரையில் இழுத்தடிக்கவே முயற்சிக்கும்.

இலங்கையின் மாகாண சபை முறைமையானது, இலங்கையின் ஜனநாயக பலவீனத்துக்கான ஒரு குறிகாட்டியாக இருக்கிறது. ஏனெனில், தேர்தல்களை பிற்போட்டுக் கொண்டு மறுபுறும் ஆளுநர்கள் மூலமாக, மத்தியின் விருப்பங்களை வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள்மீது வற்புறுத்தும் அரசியலையே அரசாங்கங்கள் முன்னெடுத்து வருகின்றன. இந்தப் போக்கில் தேசிய மக்கள் சக்தி மாற்றங்களை ஏற்படுத்துமா அல்லது இல்லையா என்னும் கேள்விக்குள் சிக்குவதை விடுத்து தேவையுள்ள தமிழ் கட்சிகள், தமிழ் சிவில் சமூக அமைப்புகள் ஆகியன மாகாண சபைத் தேர்தலுக்கான கோரிக்கையை உயர்த்திப்பிடிக்க வேண்டியது தருணம் இது.

### சித்திரவதைக்குள்ளான இளைஞனுக்கு

## சொந்த நிதியில் ரூ.12 இலட்சம் இழப்பீடு வழங்க ஆறு பொலிஸாருக்கு உத்தரவு!

கொழும்பு, மே 25

2012 ஆம் ஆண்டு பொலிஸ் காவலில் இருந்தபோது சித்திரவதை செய்யப்பட்ட ஒரு இளைஞனுக்கு தனிப்பட்ட முறையில் இழப்பீடு வழங்க தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஆறு முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

ஒவ்வொரு உத்தியேகத்தர்களும் மூன்று மாதங்களுக்குள் தங்கள் சொந்த நிதியில் இருந்து ரூ. 2 இலட்சம் செலுத்த வேண்டும்.

ஓகஸ்ட் 2012 இல் கைது செய்யப்பட்ட போது மனுதாரரான 27 வயதுடைய சுசில் பிரியங்கர செனவிரத்ன ஒரு தகவல் தொடர்பு மையத்தில் பணியாற்றினார்.

பொலிஸ் கான்ஸ்டபிள்களான பிரசன்ன கருணாஜீவ, எம்.டி.ஜகத்பால, எம்.ஜி.ஏ.டி.பி. அபேசிங்க, உபாலி ஹேரத், பி.கே.ஜி.எஸ். பி.பிரேமதுங்க மற்றும் சார்ஜன்ட் கருணாதிலக்க ஆகியோர் பொறுப்புக்கூறப்பட்டவர்கள் ஆவர். நீதியரசர்கள் எஸ்.துரைராஜா மற்றும் யசந்த கோடகொட ஆகியோரின் ஒப்புதலுடன் தீர்ப்பை வழங்கிய நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ, அரசியலமைப்பின் பல விதிகளின் கீழ் செனவிரத்னவின் அடிப்படை உரிமைகளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீறியதாகக் கண்டறிந்தார், இதில் பிரிவு 11 (சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு), பிரிவு 12(1) (சட்டத்தின் முன் சமத்துவம்), பிரிவு 13(1) (தன்னிச்சையான கைதுகளிலிருந்து சுதந்திரம்), மற்றும் பிரிவு 13(5) (குற்றமற்றவர் என்று ஊகித்தல்) ஆகியவை அடங்கும். மேலும், குற்றவியல் விசாரணையைத் தொடங்கி, 1994 ஆம் ஆண்டு 22 ஆம் எண் சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான மாநாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளை பரிசீலிக்குமாறு சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தம்புத்தேகம பொலிஸாருக்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மனுதாரர் ஈடுபட்டதாக தவறாக கைது செய்யப்பட்டதாக நீதிமன்றத்தில் குற்றம்சாட்டப்பட்டது. எனினும், அவர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவில்லை, அவர் தனது வணிக வளாகத்தில் முழுவதும் இருந்ததாகக் கூறினாலும், ஓகஸ்ட் 2, 2012 அன்று சட்டவிரோதமாக ஒன்றுகூடிய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, கடுமையான உடல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு ஆளானார். மோட்டார் சைக்கிள் ஹெல்மெட்டால் தலை மற்றும் காதில் பலமுறை தாக்கப்பட்டதாகவும், அவரது கால்கள் மற்றும் உடலில் உதைக்கப்பட்டதாகவும், காதில் இருந்து இரத்தம் வழிந்ததாகவும் அவர் சாட்சியமளித்தார். (அ)

## பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவருக்கு கடவுச்சீட்டு பெற்றுக்கொடுத்த இருவர் கைது

கொழும்பு, மே. 25

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு போலி தகவல்களை வழங்கி தேடப்பட்டுவரும் முக்கிய குற்றவாளியான பாதாள உலகக் குழு உறுப்பினர் கெஹெல்பத்தர பத்மேவுக்கு இரு கடவுச்சீட்டுகளை பெற்று கொடுத்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

32 மற்றும் 51 வயதுடைய சந்தேக நபர்களே குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு மோசடியாக வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

கெஹெல்பத்தர பத்மே 2014இல் வழங்கப்பட்ட கடவுச்சீட்டை பயன்படுத்தி 2021இல் நாட்டை விட்டு வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், வெளிநாட்டில் இருந்தபோது தனது புகைப்படம் மற்றும் விவரங்களை மோசடியாக வழங்கி 2024இல் புதிய கடவுச்சீட்டை பெற்றுள்ளார். அத்துடன், அவர் 2025இல் தனது புகைப்படங்களுடன் வேறு இரு பெயர்களில் இரண்டு கடவுச்சீட்டுகளையும் பெற்றுள்ளார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் மே 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

## பாடசாலைகளுக்கு பேருந்துகள் - அமைச்சர் சுனில்

கொழும்பு, மே 25

வசதி குறைந்த பாடசாலைகளுக்கு பேருந்துகளை நன்கொடையாக வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தொழில அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

லங்கா அசோக் லேலண்ட், லங்கா லேலண்ட் நிறுவனங்கள், கைத்தொழில் அமைச்சு இணைந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்றும் அவர் கூறினார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிழலின் அருமையும் வெயிலின் பெருமையும்!

மின்சாரம் வந்த பிறகு, பௌர்ணமி நிலவின் அழகும் அமாவாசை இருளின் செறிவும் அறியப்படாது போயின. சுழலும் மின் விசிறிகள் வந்த பிறகு, தென்னை, பனை ஓலை விசிறிகள் காணாமல் போய்விட்டன. கதிரொளி படாத சுனையின் குளிர் நீரை, பிரிட்ஜ் பெட்டிகள் தருகின்றன. குளிரக் குளிரக் காற்று தரும் ஏ.சி. கருவிகள் மலிந்துவிட்டன.

கொளுத்தும் கோடை வெயிலில், வியர்வை அருவியாய் ஊற்றெடுத்து, உடலெங்கும் நனைத்து ஓடும் ஆறாக நீளும்போது நிழல் தேடி ஏங்கும் மனது, 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்ற பழமொழியை உருவாக்கியது. இட்ட அடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க - வெப்பத்தின் திட்பத்தைச் செருப்பு முதலான காலணிகள் இல்லாதுபோக்கிவிட்டன. அருமையும் கொடுமையும் அளவைப் பொருத்தே அமைகின்றன. காலம் அதற்குக் காரணமாகிறது. உண்மையில் நம்மைவிடவும் வெயிலை அனுபவிப்பவை, தாவரங்களே. வெயிலை உணவாக்கும் வித்தையைக் கற்றவை, தாவரங்களேயாம். அதனால்தான், மணிவாசகப் பெருமான், இவ்வுலகத்தைத் 'தாவர சங்கமம்' என்று பாடுகிறார்.

மகாகவி பாரதியாரின் வசனகவிதையில், 'ஜகத் சித்திரம்' என்றொரு கவிதை நாடகம் இருக்கும். அதில், பசுமாடு சொல்கிறது: 'வெயிலைப் போல் அழகான பதார்த்தம் வேறில்லை'. வெயிலைச் சுடச் சுடச் சுவைத்து உண்பவை மாடுகள். கொளுத்தும் வெயிலில் பச்சைப் புல்லை மேயும் பசுக்கள் அதன் சூடு குறையாமல், சுவை கூட்டிக் கறக்கும் பாலில் இறக்கி வைக்கின்றன.

'வைட்டமின் டி' தரும் சூரிய ஒளி, தானும் உணவாகி, கீரை, காய்,கனி, தானிய மணிகள் எனத் தரும் தாவரங்களை விளைவித்து மேலும் உணவு தரும் தாயாகிச் சிறக்கிறது.



வெயில் வருமுன் திட்டமிட்டு, உணவுப் பொருள்களையும், தானியமணிகளையும் வெளியில் பரத்தி உலர்த்திவிடுவதும், நிழல் வருமுன் அவற்றைத் தொகுத்து அள்ளி வைப்பதும் வேளாண் மக்களின் வேலையாக இருந்தது.

கதிரடித்து 'ராசி' என்னும் அரிசி இல்லாத பதர்களை நீக்கி, அரைகுறையாய் விளைந்த 'கருக்காய்' நெல்களை ஒதுக்கி, முழுமையாய் விளைந்த நெல்மணிகளைப் பாதுகாக்க, வெயிலின் பயன்பாடு மிகவும் தேவை. அதற்கு மட்டுமல்ல, அடித்துத் துகைக்கப்பட்ட தோகைகளை வைக்கோல் ஆக்குவதற்கும் கதிரவனே கதி. அதனால்தான், தை முதல் நாள் அக்கதிரவனுக்கு நன்றி சொல்லி வைக்கப்படுகிறது, பொங்கல்.

வேடிக்கை விளையாட்டில் சில ரகசியங்களைச் சொல்லி, 'யாரிடமும் சொல்லாதே' என்று பாடுவதுண்டு. அதில் ஒன்று, 'நெல்லுக்குள்ளே அரிசியிருக்கு, ரகசியம், யாரிடமும் சொல்லாதே' என்று வரும். நெல்லில் இருந்து அரிசியைக் கண்டு கொண்டுவரவும் இந்த வெயில்தான் உற்ற துணை. மச்சுகளில் இருக்கும் நெல்லை அள்ளிக் காய வைத்து வெயில் காலத்தில் குற்றுவார்கள். இக்காலத்தில், அரிசி ஆலைகளில் அரைத்து உமியைத் தவிடுபொடியாக்கி அகற்றுகிறார்கள். அது பச்சரிசி ஆகிவிடுகிறது. அதேநெல்லை, ஊறவைத்து, விடிவதற்குள் அவித்து மணம் வந்தவுடன் வடித்துக் கொட்டி, வெயிலில் காய வைத்தால், அது புழுங்கல். நெல்லைப் புழுக்குவதால் அது புழுங்கல். வெயில் காய்ச்சல், நிழல் காய்ச்சல் என்று பக்குவமாகக் காய வைக்க வேண்டும். காய்ந்ததை அறிய உள்ளங்கையில் அள்ளி வைத்துத் தேய்த்து உமி நீக்கிப் பார்ப்பார்கள். கொஞ்சம் கூடுதலாக, காய்ந்துவிட்டால், 'நெல் முருகிவிட்டது' என்று பதறுவார்கள். அதனால் அரிசி இடிந்துபோகும்.

உளுந்து முதலான பயறுகளை, பருப்புகளை அறுவடைக் காலத்தில் குறைந்த விலைக்கு வாங்கி, உடைத்தும் திரித்தும் வகைப்படுத்தி உரிய மரப்பெட்டிகளில் சேமிக்கும் முன்னோர்கள், அவை உளுத்துப்போகாமல் இருக்க, இந்தக் கோடைக்காலத்தைப் பயன்படுத்திக் கொள்வதுண்டு. வற்றல், வடகம், அப்பளம், ஊறுகாய், உப்புக் கண்டம், இவற்றோடு, ஈசல் முதலான உணவுப் பொருள்களை வெயிலில் காய வைத்துச் சுவை கூட்டுவதோடு, பாதுகாப்பதும் நடைமுறை. அது தனிக்கதை.

கலவை சரியாக இருக்கிறதா என்று கைப்பக்குவம் பார்த்து, துணைப்பொருள்கள் சேர்த்து, குமிழ் குமிழாக அள்ளி வைத்தும், பிழிந்து வைத்தும், இளவெயிலில் இடம் பார்த்துச் செய்து வைத்த வடகங்களை, காய்களாய் வாங்கி நறுக்கிப் பதமாய் வேகவைத்த வற்றல்களைப் பார்க்கிறபோதே நாக்கில் நீர் ஊறும். காக்கை குருவிகள் கவர்ந்து செல்லாமல் செயற்கையாய் நிழல் அமைத்துக் காவல் காக்கும் பொழுதுகளில் வெயிலில் பாதி வெந்த நிலையில் அவற்றின் சில துண்டுகளை எடுத்துப் பதம் பார்ப்பதும், சுவை பார்ப்பதும் விலைக்கு வாங்கும்போது கிடைக்கப் பெறாத அனுபவங்கள்.

சாம்பார்ப் பொடி, மிளகாய்ப்பொடி முதலானவற்றுக்கான மிளகாய் வற்றல், மஞ்சள், உள்ளிட்ட மசாலாப் பொருள்களைத் தனித்தனியே காய வைக்கும்போது தெரியும்

(14ம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 25.05.2025 - 31.05.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - வைகாசி 11
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திதித்துவயம்

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் இல்லத்தில் இனிய சுபகாரியங்கள் நடைபெறும். மாதரால் மனமகிழ்ச்சி ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். புதிய தொழில் தொடர்புகளால் பொருளாதாரம் மேம்பாடு அடையும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனுகூலமாய் இருக்கும். திடீர் பயணங்களால் நன்மை ஏற்படும். மேடைப்பேச்சு, பட்டிமன்ற பேச்சாளர்களுக்கு முன்னேற்றமான வாரம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றங்காண முயல்வீர்கள். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாகக் கழியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபங்கள் ஏற்பட்டு பொருளாதார நிலை மேம்படும். குழந்தைகளின் பிடிவாத குணத்தால் தொல்லை ஏற்படும். சிலருக்குப் பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைப்பது அரிது.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் தெய்வ தரிசனம், தெய்வீகப் பயணங்கள் தேடிவரும். வீட்டில் திருமணம் போன்ற நற்காரியங்களில், தாமதம் ஏற்பட்டாலும், மிகச்சிறப்பாக நடைபெறும். சிலருக்குப் பெண்களால் தேவையற்ற அவமானங்கள் ஏற்படலாம். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். சிலருக்கு இருக்கும் வேலையை விட்டுவிட்டு, வெறு நல்ல வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். வியாபாரிகளுக்கு வெற்றிகரமான முன்னேற்றங்கள் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் மனதிற்கினிய சுபச்செய்திகள் வந்து சேரும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். உறவுகளுடன் சென்று மகான்களைத் தரிசனம் செய்து மகிழ்வீர்கள். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். ரேஷன் கார்டுகளில் புதிதாகச் பெயர் சேர்க்க, புத்திர பாக்கியம் ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். குடும்பத்துடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபடுவதால் செலவுகள் அதிகரிக்கும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பீர்கள். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பயன்களை அடைவீர்கள். தொலைதூர சுபச் செய்திகளால் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் ஆரோக்கியம் மேம்படும். தனவரவு, கூட்டாளிகள் ஒத்துழைப்பு, எதிர்பாலரால் சந்தோஷம், புகழ், கௌரவம், திருமணம் மற்றும் பெரியவர்கள் ஆசி ஆகியவை ஏற்படும். பணியில் முன்னேற்றம். கீழே பணிபுரிவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், வெளிநாட்டு வாசம் ஏற்படலாம். சிலருக்கு எந்தத் தொழிலையும் செய்ய மனம் போகாது. எந்த ஒரு காரியத்தையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என அவசரப்பட்டுச் செய்யாமல் நிதானமாகச் செய்தால் வெற்றிகிட்டும். பயனற்ற அலைச்சல்கள் பணிக்குத் தடையாய் அமையும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சிலருக்குப் புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகளின் மூலமாக எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழ் உண்டாகும். சிலருக்குக் குழந்தைகளால் தொல்லையும், அவமானங்களும் ஏற்படலாம். தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும் பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் நல்ல இசை கேட்டு மகிழ்வீர்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பெண்களின் அறிவுத்திறன் கூடும். சிலருக்கு உயர்ரக வாக னங்கள் கிடைக்கும். நல்ல பல கருத்துக்களைக் கேட்பதின் மூல மாக உங்களுக்கு ஞானத்தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். பணவிஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சினத்தை அடக்கினால் சிரமங்கள் குறையும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். சிலர் நவநாகரிக ஆடைகளை வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழ்ந்து, உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தியும் மகிழ்வீர்கள். சம்பாதிக்கும் திறன் மேம்படும். வாழ்க்கையில் மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்புமிக்கவர்களின் நட்பு ஏற்படும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்கு அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்களின் முழு ஒத்துழைப் புக் கிடைக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்கவேண்டிய நிலை ஏற்படும். புதிய யுக்திகளைப் புகுத்தி, இலாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல்ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்துகொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலமாக பண வருவாய் அதிகரிக்கும். ஆயினும், எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகள் தேர்தல் குறித்த தமிழ் அரசியல் கட்சிகளின் மனோபாவம்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இந்த மாத முற்பகுதியில் நடைபெற்ற தேர்தல்களுக்கு பிறகு உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் மல்லுக்கட்டிக்கொண்டிருக்கும் நிலையில் மாகாணசபை தேர்தல்களை பற்றி பேசுவது பொருத்தமற்றதாக தோன்றலாம். ஆனால், உள்ளூராட்சி தேர்தல்கள் சுமார் இரண்டரை வருடங்கள் தாமதிக்கப்பட்ட அதேவேளை மாகாணசபை தேர்தல்கள் ஏழு வருடங்களாக நடத்தப்படாமல் இருக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக மாகாணசபை தேர்தல்களை தற்போதைக்கு நடத்துவதில் அரசாங்கம் அவசரம் காட்டாது என்று அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. அரசாங்கம் மாத்திரமல்ல, எதிர்க்கட்சிகளும் கூட மாகாணசபை தேர்தல்களை விரைவில் சந்திப்பதற்கு விரும்பப் போவதில்லை. அதனால், அந்த தேர்தல்களை நடத்துமாறு தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடமிருந்து அரசாங்கத்துக்கு நெருக்குதல் வரப்போவதில்லை.

அதேவேளை, வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் பல வருடங்களாக தாமதிக்கப்படும் மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்தி மாகாணங்களின் நிருவாகத்தை மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோருவதில்லை. இந்திய தலைவர்கள் கொழும்பு வருகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களுடனான சந்திப்புகளில் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலை கொடுக்குமாறு வேண்டுகோள் விடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்துடன் நேரடியாக அதைப் பற்றி கவனம் செலுத்துவதில்லை.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கடந்த வருட இறுதியில் புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் மாகாணசபை தேர்தல்களையும் நடத்த வேண்டும் கேட்டுக் கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி அதே வேண்டுகோளை கடந்த ஏப்ரலில் கொழும்புக்கு வந்த விஜயம் செய்த வேளையிலும் முன்வைத்தார். அவருக்கு எந்த பதிலையும் வெளிப்படையாக கூறாத ஜனாதிபதி திசாநாயக்க மாகாணசபை தேர்தல்கள் குறித்து தற்போது எத்தகைய நிலைப்பாட்டில் இருக்கிறார் என்று தெரியவில்லை. அவர் இப்போது பெரும்பாலும் தேசிய இனப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் குறித்து பேசுவதில்லை. சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகள் தொடர்பில் தனது அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படக்கூடிய எந்தவொரு நடவடிக்கையும் தென்னிலங்கை தேசியவாத சக்திகளை தங்களிடமிருந்து அன்னியப்படுத்திவிடக் கூடாது என்பதில் மாத்திரமே அவர் எச்சரிக்கையாக இருக்கிறார் என்று தெரிகிறது.

இத்தகைய ஒரு பின்புலத்தில், தென்னிலங்கையை சேர்ந்த இரு சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் ஒரு முன்னாள் இராஜதந்திரியும் மாகாணசபைகள் குறித்து அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் முக்கிய கவனத்துக்குரியவையாக இருக்கின்றன.

மாகாணசபை தேர்தல்களை அரசாங்கம் விரைவில் நடத்த வேண்டும் என்று இடையறாது வலியுறுத்திவரும் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா மக்களினால் தெரிவு செய்யப்படும் மாகாணசபைகளை வலுப்படுத்துவதன் மூலமாக அதிகாரப் பரவலாக்கத்துக்கு புத்துயிரளிக்க வேண்டும் என்றும் மாகாணசபைகள் பயனுறுதியுடைய முறையில் செயற்படுவதற்கு தடையாக இருக்கும் ஆளுநர்களின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தார்.


பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டதை போன்ற அமைச்சர்கள் மட்டத்திலான இன்னொரு குழுவை மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களை குறைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்க வேண்டும் என்றும் தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது. உண்மையில் இந்த கோரிக்கை தமிழ்க் கட்சிகளிடம் இருந்தே வந்திருக்க வேண்டியதாகும்.

தற்போது இந்திய வெளியுறவுச் செயலாளராக இருக்கும் விக்ரம் மிஸ்றி பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் பிரதி இந்திய உயர்ஸ்தானிகராக பதவி வகித்த நாட்களில் அவருடனான சந்திப்பு ஒன்றின்போது தமிழ் ஊடகவியலாளர்கள் ஆளுநர்களுக்கு இருக்கும் அளவுகடந்த அதிகாரங்கள் காரணமாக மாகாண முதலமைச்சர்களினால் பயனுறுதியுடைய முறையில் செயற்பட முடியவில்லை என்றும் மாகாணசபைகள் மூலமாக தமிழ் மக்களால் எந்த பயனையும் அடைய முடியாமல் இருக்கிறது என்றும் கூறினார்கள். அதற்கு பதிலளித்த அவர் ஆளுநர்களின் அதிகாரங்களில் கணிசமானவற்றை முதலமைச்சர்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் அரசியல்வாதிகள் முன்வைத்து அழுத்தத்தைக் கொடுத்திருக்க வேண்டும் என்று கூறினார். ஏன் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என்றும் அவர் கேட்டார்.

ஆளுநர்களின் அதிகாரங்களை குறைக்க வேண்டியதன் அவசியத்தை கலாநிதி ஜெகான் பெரேரா வலியுறுத்தியிருக்கும் நிலையில், விக்ரம் மிஸ்றி கொழும்பில் அன்று தெரிவித்த கருத்தை நினைவுபடுத்துவது பொருத்தமானது.

பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பின்னடைவில் இருந்து உள்ளூராட்சி தேர்தல்களில் மீண்டு விட்ட தமிழ்க் கட்சிகள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு தடையாக இருக்கும் விடயங்களை பாராளுமன்றத்தின் மூலமாக அகற்றி விரைவாக அந்த தேர்தல்களை நடத்த வேண்டும் என்று ஒன்றிணைந்து அரசாங்கத்தைக் கோருவதே தற்போதைய தருணத்தில் விவேகமான செயலாக இருக்கும் என்று முன்னாள் இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜெயதிலக கூறியிருக்கிறார்.

அந்த கோரிக்கைக்கு தென்னிலங்கையிலும் சர்வதேச சமூகத்திலும் ஆதரவைப் பெறக்கூடியதாக இருக்கும் என்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான எந்தவொரு பேச்சுவார்த்தையும் புதிதாக தெரிவு செய்யப்படும் மாகாணசபைகளுக்கும் ஜனாதிபதி திசாநாயக்கவின் நிருவாகத்துக்கும் இடையிலானதாகவே இருக்க முடியும் என்றும் அவர் உள்ளூராட்சி தேர்தல்களுக்கு பின்னரான சூழ்நிலைகள் குறித்து எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். அவ்வாறு மாகாண சபைகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தைகளின் விளைவுகளை சர்வகட்சி வட்டமேசை மகாநாடு ஒன்றில் சமர்ப்பித்து நீண்டகால அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை நோக்கிப் பயணிக்க முடியும் என்பது தயானின் கருத்தாக இருக்கிறது.





> **தனிப்பட்ட ஆளுமை மோதல்களுக்கு அப்பால் மக்களின் நலன்களில் அக்கறை காட்டும் மனோபாவம் பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகளிடம் கிடையாது. தங்களுக்கு விருப்பம் இல்லாதவர்கள் பதவிக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்றால் மாகாணசபை தேர்தல்களே வேண்டாம் என்றுகூட எமது அரசியல்வாதிகள் கூறிவிடுவார்கள் என்று அல்லவா எண்ண வேண்டியிருக்கிறது.**

அரசியலமைப்பு திருத்தம் அல்லது புதிய அரசியலமைப்பு தொடர்பாக முடிவற்ற பேச்சுவார்த்தைகளை நடத்துவது சிங்கள அரசியல் அதிகார வர்க்கம் கவனத்தை திசைதிருப்புவதற்கு காலங்காலமாக கடைப்பிடித்து வருகின்ற ஒரு அணுகுமுறை என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கும் தயான் அத்தகைய ஒரு பொறியில் தமிழ்க் கட்சிகள் விழப்போகின்றனவா என்று கேள்வியெழுப்புகிறார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வைக் கண்டு அதில் இருந்து நீண்டகாலத் தீர்வை நோக்கிப் பயணிப்பது குறித்து பேசிவரும் தமிழ்க்கட்சிகள் அதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகள் குறித்து சிந்திப்பதில்லை. சாத்தியமாகக்கூடியதும் இந்தியாவினதும் சர்வதேச சமூகத்தினதும் ஆதரவைப் பெறக்கூடியதுமான இடைக்கால ஏற்பாடுகள் குறித்து தமிழ்க்கட்சிகள் அக்கறை செலுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே அவர்களின் கருத்துக்கள் இங்கே சுட்டிக் காட்டப்படுகின்றன.

உள்ளூராட்சி தேர்தல்களைப் போன்று மாகாணசபை தேர்தல்களையும் கலப்பு தேர்தல் முறையில் நடத்துவதற்காக பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு நிறைவடையாமல் இருக்கும் எல்லை நிர்ணயச் செயன்முறைகள் மாகாணசபை தேர்தல்களுக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதே பொதுவான கருத்தாக இருக்கிறது. எல்லை நிர்ணயச் செயன்முறைகள் நிறைவுசெய்யப்பட்டால் அல்லது முழுமையாக விகிதார பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கு சட்டத்தை திருத்தினால் மாத்திரமே மாகாணசபை தேர்தல்களை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். இரத்நாயக்க சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

அதை ஆட்சேபித்து அவருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கும் சிவில் சமூகச் செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வாளருமான குசல் பெரேரா தற்போதைய சட்டக்கட்டமைப்பை ஆணைக்குழுவின் தலைவர் தவறாக வியாக்கியானம் செய்வதாக குறிப்பிட்டிருக்கிறார். எல்லை நிர்ணயச் செயன்முறைகள் நிறைவு செய்யப்படாவிட்டாலும் கூட மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு எந்த தடையும் கிடையாது என்று பெரேரா வாதாடுகிறார்.

சட்டத்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எல்லை நிர்ணயச் செயன்முறையை நிறைவுசெய்வதற்கு பாராளுமன்றம் தவறுவதனால் தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாணசபைகள் தேர்தல் சட்டம் செல்லுபடியற்றதாகப் போய்விடுவதில்லை என்று தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கும் பெரேரா, புதிய சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்ட பிறகு சபாநாயகர் கைச்சாத்திடும் வரை, நடைமுறையில் உள்ள சட்டங்கள் செல்லுபடியாகக் கூடியவை என்பது அனைவருக்கும் தெரிந்ததே என்றும் ஆணைக்குழு மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசின் எந்த நிறுவனத்திடமிருந்தும் அனுமதியைப் பெறவேண்டிய தேவை இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் ஒரு சிலரிடமிருந்தாவது இத்தகைய கோரிக்கைகளும் கருத்துக்களும் வருகின்ற அதேவேளை தமிழர் தரப்பில் அரசியல்வாதிகளிடமிருந்தோ அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தோ மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் மாகாணசபைகளின் நிருவாகங்களை மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அக்கறை வெளிப்படுவதில்லை என்பது ஒரு விசித்திரமான அம்சமாகும்.

மாகாணசபைகளின் மூலமாகவோ அல்லது 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமாகவோ தேசிய இனப்பிரச்சினைக்கு நிலைபேறான அரசியல் தீர்வொன்றைக் கண்டுவிட முடியும் என்று இந்த கட்டுரையாளர் நம்புவதாக எவரும் கருதவேண்டியதில்லை. ஆனால், போரின் முடிவுக்கு பிறகு 16 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட தமிழ் மக்கள் பெருமளவக்கு ஒரு அரசியல் வெற்றிடத்தில் இருப்பதால் அவர்களின் பிரச்சினைகளை கையாளுவதற்கான அணுகுமுறையை எங்கிருந்து தொடங்குவது என்ற தெளிவு தமிழ் அரசியல் சமுதாயத்திடம் இல்லை என்பதை எவரும் மறுக்க முடியாது.

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் தென்னிலங்கையைச் சேர்ந்த தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்கக்கூடாது என்று கூறிக்கொண்டு உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ்க்கட்சிகள் கூடுதலான வாக்குகளைப் பெற்றுவிட்டதால் நிலைவரத்தில் எந்த மாற்றமும் வந்துவிடவில்லை. தங்களுக்கு

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையை மீளப்பெறுவதற்கு அடையாளபூர்வமான நடவடிக்கைகள் போதாது!



கலாநிதி ஜெகான் பெரேரா

நாட்டில் தொடருகின்ற ஒரு பிளவை முதன்மைப்படுத்துபவையாக மே மாதத்தின் 18 - 19 திகதிகள் இருக்கின்றன. போரில் இறந்தவர்கள் சகலரும் இலங்கையர்களே என்ற போதிலும், சிலர் மற்றைய தரப்பின் இழப்புகளை அனுதாபத்துடன் நோக்கத் தயாராயில்லை. மூன்று தசாப்தகாலப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட விதம் உட்பட நாட்டு மக்களுக்கு வேறுபட்ட நினைவுகள் இருக்கின்றன என்ற அசௌகரியமான உண்மையை இந்த இரு தினங்களும் வெளிக்கொணருகின்றன. தமிழ் மக்கள் மே 18 ஆம் திகதியை விடுதலை புலிகள் உட்பட தங்களில் பலர் கொல்லப்பட்ட தினமாகவும் போரில் தோல்விகண்ட தினமாகவும் நினைவு கூர்ந்தார்கள். இந்த வருடம் கொழும்பு உட்பட நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மே 18 ஆம் திகதி தமிழ் மக்கள் மாத்திரம் தங்களது அன்புக்குரியவர்களை நினைவுகூரவில்லை. சிங்கள மக்களும் தாங்கள் ஏற்பாடு செய்த நிகழ்வுகளில் அவ்வாறு தங்களது அன்புக்குரியவர்களை நினைவு கூர்ந்தார்கள். சோகமயமான நிகழ்வுகளைக் காணக்கூடியதாக இருந்தது. அரசாங்கம் மே 18 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு அண்மையாக அமைந்திருக்கும் போர் வீரர்கள் நினைவிடத்தில் போர் வெற்றியையும் போரில் கொல்லப்பட்ட பாதுகாப்பு படையினரையும் நினைவு கூர்ந்தது. அந்த வைபவத்தில் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க கலந்து கொண்டார்.

இந்த நாட்களில் பெரும்பாலும் ஒரு பதற்றநிலை காணப்பட்டது. குறிப்பாக, வடக்கு, கிழக்கில் முன்னாள் போர் வலயங்களில் பெருமளவில் பாதுகாப்பு படைகள் குவிக்கப்பட்டிருந்தன. பெருமளவில் மனித உரிமை மீறல்களும் போர்க்குற்றங்களும் இடம்பெற்றதாக நாட்டில் உள்ள தமிழ் மக்களும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ்ச் சமூகமும் மேற்குலக சர்வதேச சமூகமும் நம்புகின்றனர். வடக்கு, கிழக்கில் வாக்காளர்களிடமிருந்து கிடைத்த ஆதரவில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியை அரசாங்கம் அக்கறையுடன் நோக்க வேண்டும்.

மே 19 ஆம் திகதி போர் வெற்றித்தின வைபவத்தில் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால், வாக்காளர்களின் ஆதரவை ஆட்சி முறையாக மாற்றுவதற்கு நினைவு வைபவத்தில் பங்கேற்பதா இல்லையா என்ற அடையாளபூர்வமான சமிக்ஞைகள் மாத்திரம் போதாது என்பதை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுகின்றன. நினைவு நிகழ்வுகளில் தமிழ்மக்களினால் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்ளக் கூடியதாக இருந்தமை நல்லிணக்கத்தின் திசையில் நாடு மாறிவருகின்றது என்பதற்கு சான்றாகும்.

நினைவேந்தலுக்கான உகந்த சூழ்நிலையை தோற்றுவிப்பதில் அரச நிறுவனங்கள் ஒத்துழைத்திருக்கின்றன. மே 18 நினைவேந்தல்கள் இடையூறுகளின்றி நடைபெறுவதை அனுமதிக்குமாறு சகல பொலிசாரையும் அறிவுறுத்துமாறு வேண்டுகோள் விடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் எழுதியது. கடந்த காலத்தில் மே 18 நினைவேந்தல்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கிய போதிலும் கூட, சட்டமீறல்கள் இடம்பெற்றதாக காரணம் கூறி பாதுகாப்பு படையினர் மக்களை கைதுசெய்த சம்பவங்களை ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு சுட்டிக்காட்டியது.

"அமைதியான முறையில் நினைவேந்தல் செய்வதையும் உணவுப் பொருட்களை விநியோகிப்பதையும் பாகுபாட்டை, பகைமையை அல்லது வன்முறையை தூண்டும் செயற்பாடுகளாகக் கருதமுடியாது என்றும் இலங்கை அரசியலமைப்பின் 14(1) (ஏ) சரத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டிருக்கும் பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தின் கீழ் அவை பாதுகாக்கப்படுகின்றன" என்று மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதத்தில் சுட்டிக்காட்டியது. இந்த அறிவுறுத்தல்களை இந்த தடவை பொலிசார் பின்பற்றினார்கள் போன்று தெரிகிறது.

அதிருப்தி அடைந்திருக்கும் இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் தொடர்பிலான அதன் அணுகுமுறையை அரசாங்கம் மீள்சிந்தனைக்கு உட்படுத்துகிறது என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. வடக்கு, கிழக்கில் அண்மைய உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் அரசாங்கத்தின் மீது சிறுபான்மைச் சமூகங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தி குறித்த ஒரு முன்னெச்சரிக்கையாகும். அதை அலட்சியம் செய்வது அரசாங்கத்துக்கு கட்டுப்படியாகாது. ஆழமான இனப்பிளவுகளை அனுபவித்த ஒரு நாட்டில் வடக்கு, கிழக்கில் தமிழ்க்கட்சிகளுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் கிடைத்த வெற்றி தங்களது அக்கறைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கின்றது என்று சிறுபான்மைச் சமூகங்கள் நம்பவில்லை என்பதன் வெளிப்பாடாகும்.

இந்த தேர்தல் முடிவுகள் மேற்பரப்பிற்கு கீழ் கிடக்கும் பிரச்சினைகளை வெளிக்காட்டுகிறது. நீண்டகாலமாக தீர்வு காணப்படாமல் இருக்கும் மனக்குறைகளும் தனித்துவமான அபிலாசைகளுமே அவையாகும். தேசிய மக்கள் சக்தி அவற்றின் மீது போதுமான கவனத்தைச் செலுத்தவில்லை. அரசாங்கம் அதன் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் நியாயப்பாட்டை பேணுவதாக இருந்தால், தேர்தல் பயன்களை நிலைபேறான உறுதிப்பாடாக மாற்றுவதாக இருந்தால், சிறுபான்மைச் சமூகங்களின் இந்த பிரச்சினைகளுக்கு காலந்தாழ்த்தாமல் பதில்களைக் காணவேண்டியது அவசியமாகும்.



**13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும். அதைவிடுத்து முன்னைய அரசாங்கங்கள் செய்ததைப் போன்று அந்த திருத்தத்தின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதன் மூலம் அரசியலமைப்பை உறுதியாகப் பின்பற்றாமல் தற்போதைய அரசாங்கமும் நடந்து கொள்ளக்கூடாது.**

வடக்கு, கிழக்கில் உள்ள சிறுபான்மைச் சமூகங்களுக்கும் சிங்கள பெரும்பான்மை இனத்தவர்கள் உட்பட நாட்டின் ஏனைய பாகங்களில் வாழ்கின்ற சமூகங்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் இருக்கின்றன. வறுமை, அபிவிருத்தியின்மை, பொருளாதார வளங்களை போதுமான அளவுக்கு பெற முடியாமல் இருக்கின்றமை, ஆழமாக வேரூன்றிவிட்ட ஊழல் ஆகியவையும் அந்த பொதுவான பிரச்சினைகளில் அடங்கும்.

ஆனால், இன, மத சிறுபான்மைச் சமூகங்களைப் பொறுத்தவரை, பெரும்பான்மை இனத்தவர்கள் முகங்கொடுக்காத பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவை வரலாற்று மற்றும் அரசியல் பின்புலத்தைக் கொண்ட பிரத்தியேகமான பிரச்சினைகளாகும். குடிமக்களின் நிலங்களில் இராணுவ ஆக்கிரமிப்பு, காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைகள், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாமல் அல்லது விசாரணைகள் நடத்தப்படாமல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக பலர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது மற்றும் பிராந்திய சுயாட்சிக்கான நீண்டகாலக் கோரிக்கை ஆகியவை அந்த பிரச்சினைகளில் அடங்கும்.

நெடுங்காலமாக தொடரும் இந்த பிரச்னைகளுக்கு மத்தியில், அரசாங்கத் தலைவர்கள் அடிக்கடி கூறுவதைப் போன்று சகல மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவர் என்ற நிலைப்பாட்டை எடுப்பது போதுமான ஒரு அணுகுமுறை அல்ல. இந்த பிரச்சினைகள் தீர்வு காணப்படாமல் நீடிப்பது அவநம்பிக்கையை ஆழமாக்கியிருக்கிறது. அரசாங்கத்தின் ஜாக்கிரதையுடன் கூடிய தெளிவற்ற அணுகுமுறை பாதிக்கப்பட்ட சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு உதவவில்லை.

அபிவிருத்தியில் ஒப்புரவு மற்றும் சமத்துவ உரிமைகள் என்று தேசிய மக்கள் சக்தி வலியுறுத்துகின்ற விடயங்கள் கோட்பாட்டு அடிப்படையில் வரவேற்கக்கூடியவையே. ஆனால், சிறுபான்மைச் சமூகங்கள் முகங்கொடுக்கும் பிரத்தியேகமான சவால்களை கையாளுவதிலேயே அந்த கோட்பாடு மீதான உண்மையான பரீட்சை தங்கியிருக்கிறது. தீர்வுகாணப்பட வேண்டிய உடனடிப் பிரச்சினைகளின் பட்டியலில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது முதலிடத்தில் இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது வலிமை வாய்ந்த ஒரு நல்லெண்ணச் சமிக்ஞையாகவும் சிறுபான்மைச் சமூகங்களும் சர்வதேச சமூகமும் கருத்தூன்றி கவனத்துடன் நோக்கக்கூடிய முக்கியமான ஒரு கொள்கை நகர்வாகவும் அமையும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது அந்த கொடிய சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருக்கும் பல கைதிகளின் விடுதலைக்கு வழிவகுக்கும். முதலில் 1979 ஆம் ஆண்டில் ஒரு ஆறுமாத காலத்துக்கு மாத்திரம் தற்காலிக ஏற்பாடாக சட்டப்புத்தகத்தில் சேர்க்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் நீண்டகால தடுப்புக்காவலுக்கு சட்ட அங்கீகாரத்தை வழங்குகிறது. இப்போது அந்த சட்டம் நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக பல்வேறு அரசாங்கங்களின் கீழ் நீடித்துவருகிறது.

சந்தேக நபர்களிடமிருந்து பாதுகாப்பு படைகளினால் பெறப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலங்களை நீதிமன்றங்களில் சாட்சியமாக ஏற்றுக் கொள்வதற்கு பயங்கரவாத தடைச்சட்டம் அனுமதிக்கிறது. ஆனால், நீதிமன்றங்கள் அந்த ஒப்புதல் வாக்குமூலங்களை நிராகரித்த அல்லது சாட்சியமாக அவற்றை அனுமதிப்பதில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொண்ட பல சந்தர்ப்பங்கள் இருந்தன. அந்த சட்டம் தொடர்ந்து நீடிப்பது மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் மீதான அரசாங்கத்தின் பற்றுறுதிக்கு இசைவானதல்ல. தமிழ் மக்களின் கவலைக்கு இது இன்னொரு காரணமாக அமைகிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கினால் அது ஜனநாயக சீர்திருத்தங்களை நோக்கிய முக்கியமான ஒரு நகர்வாக அமையும். அத்துடன் உலகளாவிய நியமங்களை இலங்கை பின்பற்றுவதாகவும் நிலைபேறான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதாகவும் அமையும்.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும் குடிமக்களின் நிலங்களை விடுவிப்பது முன்னுரிமை கொடுத்துக் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயமாகும். அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் திரும்பத் திரும்ப உறுதியளித்த போதிலும் கூட, போர் முடிவுக்கு வந்து 16 வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கு சொந்தமான 2,500 ஏக்கர்களுக்கும் அதிகமான நிலங்கள் இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் ஆக்கிரப்பில் தொடர்ந்தும் இருப்பதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் உறுதி செய்திருக்கிறார். இந்த நிலங்களை அவற்றுக்கு சட்டபூர்வமான உரித்தைக் கொண்டவர்களுக்கு திருப்பிக் கையளிப்பது ஒரு நீதி விவகாரம் மாத்திரமல்ல, தங்களது வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதில் நாட்டம் கொண்டிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நடைமுறை முக்கியத்துவமுடையதுமாகும். இந்த விவகாரத்தை தாமதமின்றிக் கையாளுவதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரமும் சந்தர்ப்பமும் இருக்கிறது.

ஆனால், இதற்கு மாறாக, வடக்கில் உரிமைகோரப்படாமல் கிடக்கும் நிலங்களுக்கு மூன்று மாதகாலத்திற்குள் உரிமை கோரப்படாவிட்டால், அவை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படும் என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது. மூன்று மாதகால அவகாசம் மிகவும் குறுகியதாகும். அந்த நிலங்கள் பல தசாப்தங்களாக மக்களால் அணுகமுடியாதவையாக இருந்துவந்திருப்பதுடன் உரிமையாளர்களில் பலர் நாட்டிலிருந்து வெளியேறியும் விட்டார்கள். சிலர் மரணமடைந்து விட்டார்கள். அதனால், அரசின் வர்த்தமானி அறிவித்தல் நிலங்களை அபகரிப்பதற்கு அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற இன்னொரு முயற்சி என்ற சந்தேகம் எழுகிறது.

மாகாணசபை தேர்தல்களும் மேலும் காலதாமதமின்றி முன்னுரிமை கொடுத்து நடத்தப்பட வேண்டியவையாக இருக்கின்றன. தேசியக் கொள்கையை வகுப்பதிலும் முக்கியமான நியமனங்களைச் செய்வதிலும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு குரல் இல்லாமல் இருப்பது தற்போதைய அரசாங்கத்தின் குறைபாடுகளில் ஒன்றாகும். இந்த

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் கையிலுள்ள துப்பாக்கி எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படக்கூடாது!

**பனங்காட்டான்**




**'இங்குள்ள பெயர்ப் பலகையில் தனது மகனின் பெயர் இருக்கிறதா? கணவரின் பெயர் இருக்கிறதா? தந்தையின் பெயர் இருக்கிறதா என்பதை பலரும் விரல் விட்டுத் தேடுவதை நான் அவதானித்தேன். தெற்கில் மட்டுமா இந்த நிலை? வடக்கிலும் அவ்வாறே தேடுகின்றனர். தனது பிள்ளைகளை, தனது கணவரை இழந்தோர் அவர்களின் புகைப்படங்களை வீதிகளில் வைத்துக் கொண்டு அவர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்புகின்றனர். அனைத்துப் பெற்றோருக்கும் அவர்களின் பிள்ளை ஓர் இரத்தினக்கல். படையினரது கைகளிலுள்ள துப்பாக்கி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயற்படக்கூடாது என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு.'**
**போர் வெற்றிவிழாவில் ஜனாதிபதி அநுர குமர**

மழை விட்டும் தூவானம் போகவில்லை என்பதுபோல் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் முடிவடைந்து மூன்று வாரங்கள் ஆகின்ற போதிலும் எந்த ஒரு சபையும் இன்னும் உருப்படியாகவில்லை. தேர்தலில் வென்றதாகக் கூறியவர்களும் அதற்கான கதிரைகளில் இதுவரை ஏறவில்லை. கூட்டணிகளை அமைக்க முயன்றவர்களும் அதில் வெற்றி கண்டதாகத் தெரியவில்லை.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஒரு சபையின் மொத்த உறுப்பினர்களில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைகள் இருப்பின் அந்தக் கட்சி அல்லது குழுவில் ஒருவரை மேயராக அல்லது தலைவராக நியமிக்க முடியும்.

எவருக்கும் பெரும்பான்மை இல்லாவிடின் - அதுவே கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும், அதன் முதலாவது அமர்வின்போது இரகசிய வாக்கெடுப்பின் மூலம் மேயரை அல்லது தலைவரை தெரிவு செய்ய வேண்டும். (ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய இடம்பெற்ற ரகசிய வாக்கெடுப்பின்போது நடைபெற்ற கண்ணாமூச்சி விளையாட்டுக்கு இங்கு சாத்தியமுண்டு).

இவ்வாறான ரகசிய வாக்கெடுப்பில் மேயர் அல்லது தலைவரை தெரிவு செய்யும்போது எதிர்க்கட்சிகள் கூட்டணிகளை உருவாக்கி பெரும்பான்மை இல்லாவிட்டாலும் மேயர் அல்லது தலைவர் பதவியை தக்க வைக்க முடியும். அநேகமாக இப்போதுள்ள நிலைமையில் இந்த விநோத விளையாட்டுக்கு இடமுண்டு.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் ஒரு கட்சி அல்லது குழு அதிக இடங்களில் வெற்றி பெற்றதென்பது அறுதிப் பெரும்பான்மையென்று அர்த்தப்பட மாட்டாது. உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை தேர்தல் முடிவை எடுத்துக் கொள்ளலாம்.

இங்கு தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களைப் பெற்றது. இதுவே ஒரு தரப்புக்கான ஆகக்கூடிய எண்ணிக்கை. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய பேரவை 12 ஆசனங்களையும், அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் பெற்றன. மேலும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி என்பவை தலா நான்கு ஆசனங்களையும், ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவை தலா ஒவ்வொன்றையும் பெற்றன. மொத்தம் 45 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் அறுதிப் பெரும்பான்மைக்கு 23 எண்ணிக்கை தேவை. நவக்கிரகங்கள்போல் நிற்கும் தமிழ்த் தேசியவாத கட்சிகள் யாரோடு யார் சேர்ந்து ஆட்சியமைப்பார்கள் என்பதை எவராலும் சொல்ல முடியாதுள்ளதுவே இங்குள்ள நிலைமை.

தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கில் 377 உறுப்பினர்களைப் பெற்று 35 சபைகளில் முன்னணியில் நிற்கிறது. ஆனால், 6 சபைகளில் மட்டுமே எவரது ஆதரவும் இல்லாது தனித்து ஆட்சியமைக்கும் அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது. இதில் கிளிநொச்சியில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற இரு சபைகளை சிறீதரனின் தனிப்பட்ட வெற்றியாகவே கட்சிப் பிரமுகர்களும் கணிக்கின்றனர். 35ல் 6 போக மிகுதி 29 சபைகளை யாருடன் யார் இணைந்து ஆட்சியமைப்பதென்பது அந்தச் சபைகளின் முதலாவது அமர்வின்போதுதான் தெரிந்து கொள்ள முடியும்.

தெற்கிலும் இதே நிலைமைதான். இங்குள்ள 359 சபைகளில் 265ல் அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி கூடிய ஆசனங்களைப் பெற்று முதலிடத்தில் நிற்கிறது. ஆனால் 133 சபைகளில் மட்டுமே இதற்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்துள்ளது. எனவே இச்சபைகளில் அவர்களுக்குப் பிரச்சனை இல்லை. ஆனால், மிகுதி 132 சபைகளில் ஆட்சியமைக்க வேறு கட்சிகளின் அல்லது குழுக்களின் ஆதரவை பெறவேண்டும். கொள்கை ரீதியாக இது முடியாவிடின் தொங்குபாலமாகவே இச்சபைகள் இழுபடும்.

117 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபையில் அநுர குமர தரப்புக்கு 48 ஆசனங்கள் கிடைத்துள்ளன. எதிரணிகள் கூட்டாக 67ஐ பெற்றுள்ளன. தலைநகரைக் கைப்பற்றுவதற்காக சாம பேத தான தண்டம் ஆகிய நான்கு ஆயுதங்களையும் அநுர தரப்பு பயன்படுத்துகிறது. மனோ கணேசனின் சகோதரரான பிரபா கணேசனின் தரப்பு வழங்கும் ஆதரவோடு அநுர குமர அணி கொழும்பு மாநகரசபையை கைப்பற்றியுள்ளதாக சொல்லப்படுகிறது.

தோற்ற கட்சிகளுடன் கூட்டணி இணைத்து ஆட்சியை கைப்பற்றுவதை எதர்ப்பதாகவும், அவர்களுக்கு நிதி வழங்குவதை யோசித்தே செய்ய முடியுமெனவும் தெரிவித்து வரும் அநுர தரப்பு கொழும்பை கைப்பற்றுவதற்கு எதனையும் செய்ய (இழக்க) தயாராகியுள்ளது.

அறுதிப் பெரும்பான்மை பெறாத சபைகளுக்கான முதலாவது அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற வேண்டுமென்பதும் அந்த அமர்வில் மேயர் அல்லது தலைவர் இடம்பெற வேண்டுமென்பதும் சட்டம். யூன் மாதம் 2ம் திகதிக்குப் பின்னர் இந்த அமர்வுகள் இடம்பெறுமாயின் சகல சபைகளினதும் முடிவுகளை அறிய ஓரிரு வாரங்கள் காத்திருக்க வேண்டும். வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியவாத கட்சிகளின் முடிவு எவ்வாறு அமையுமென்பதைப் பொறுத்தே அங்குள்ள சபைகளின் ஆயுட்காலம் தீர்மானிக்கப்படும்.

'நாங்கள் சாதகமாக ஆதரவளிக்கக்கூடிய தரப்புகளுடன் பேசியுள்ளோம். எங்களுக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாத சபைகளில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்ணியின் ஆதரவு கிடைக்குமென நம்புகிறோம். நிலைமையை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்" என்று தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். எதுவும் நம்பிக்கை அளிப்பதாகக் காணப்படவில்லையென்பதை அவரது சொல்லாடல் புரிய வைத்தது.

இது ஒருபுறமிருக்க, தெற்கில் சற்று சூடு பிடித்திருக்கும் போர்வீரர் நாள் நிகழ்வு பற்றிய விடயம் பார்க்கப்பட வேண்டியது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகளை அடுத்து அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் ராணுவ வெற்றிநாள் என்ற பெயரில் இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

தமது இனவாதப் போக்கினால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்புப் போரில் மரணித்த 27,000 பேருக்கும் மேலான இராணுவத்தினருக்கு மரியாதை வழங்க இந்த நாளை அவர் உருவாக்கினார். இவ்வருட விழாவில் ஜனாதிபதி அநுர குமர பங்குபற்ற மாட்டாரென்று இருந்தபோதிலும் எதிர்க்கட்சிகள் இதனை அரசியலாக்க எத்தனித்ததால் அவர் பங்குபற்றினார் என்பதே உண்மை.

இந்நிகழ்வில் அவர் நிகழ்த்திய உரையில் இராணுவத்தினர் என்ற சொற்பதத்தை தவிர்த்து அதற்குப் பதிலாக படையினர் என்று குறிப்பிட்டதை எதிர்த்தரப்பினர் - முக்கியமாக உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றவர்கள் கடுமையாக விமர்சிக்கின்றனர். ஜனாதிபதி உண்மையைப் பேசவில்லையென்று சிங்கள இனவாதிகளை உசுப்பேற்றும் வகையில் இவ்விருவருடைய உரைகளும் சிங்கள ஊடகங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இலங்கையில் அரச பயங்கரவாதத்தை நிலைநிறுத்திய இனஅழிப்புப் போரில் இராணுவத்தினர் (காலாட்படை - ஆமி) மட்டும் ஈடுபடவில்லை. கடற்படை, வான்படை, காவற்படை என்ற சகல படைத்தரப்பினரும் தமிழின அழிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் அனைவர் தரப்பிலும் உயிரிழப்பு இடம்பெற்றது. இதன் பின்னரே அனைத்துத் தரப்புகளையும் இணைத்து முப்படைத் தளபதியாக போர்க்குற்றவாளியான சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டார். அநுர குமர ஜனாதிபதியாகிய பின்னரே இவர் ஓய்வுக்கு அனுப்பப்பட்டார்.

எனவே, போரில் இறந்த அல்லது உயிர் நீத்த படையினரை வெறுமனே இராணுவத்தினர் என்று அழைப்பது முறையற்றது. அதனாலேயே அவர்களை படையினர் என்று அநுர குமர குறிப்பிட்டதில் தவறு இருக்க முடியாது. இதனை ஒரு குற்றமாகச் சுட்டிக்காட்டி இராணுவத்தினரை ஆட்சித் தரப்புக்கு எதிராக்க உதய கம்மன்பிலவும், விமல் வீரவன்சவும் முனைவது தெரிகிறது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமர ஆற்றிய உரையின் ஒரு பகுதி பின்வருமாறு இருந்தது: 'இங்குள்ள பெயர்ப் பலகையில் தனது மகனின் பெயர் இருக்கிறதா? கணவரின் பெயர் இருக்கிறதா? தந்தையின் பெயர் இருக்கிறதா என்பதை பலரும் விரல் விட்டுத் தேடுவதை நான் அவதானித்தேன். தெற்கில் மட்டுமா இந்த நிலை? வடக்கிலும் அவ்வாறே தேடுகின்றனர். தனது பிள்ளைகளை, தனது கணவரை இழந்தோர் அவர்களின் புகைப்படங்களை வீதிகளில் வைத்துக் கொண்டு அவர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்புகின்றனர். அனைத்துப் பெற்றோருக்கும் அவர்களின் பிள்ளை ஓர் இரத்தினக்கல். அனைத்துப் படையினரதும் கைகளிலுள்ள துப்பாக்கி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயற்படக்கூடாது என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு", என அநுர குமர குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றும்போது 1971 ஏப்ரல் சேகுவேரா கிளர்ச்சியின் போதும், 1987 - 1989 காலப்பகுதியில் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்ட ஜே.வி.பி.யினர் பற்றியும் அநுர குமர நினைவில் கொண்டுள்ளாரென்பது நன்றாகத் தெரிகிறது. அதனாலேயே அவரது உரையில் உண்மை வெளிச்சமாகியது.

இந்த உண்மையை இவரும் இவரது தரப்பினரும் உண்மையாகவே தொடருவார்களானால் நாடு நலன் பெறும், மக்களும் நலம் பெறுவர். பேச்சு பல்லக்கு, தம்பி கால்நடையாக இருக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தனி அத்தியாயம்’ ஈழவரலாற்றில் புஸ்பராணி!

என்.கே. துரைசிங்கம்

ஈழமண்ணின் விடுதலைக்காக ஆயிரமாயிரம் தியாகிகள் இன்னுயிர்களை ஈய்ந்து வரலாறாகி விட்டனர். இந்தப் போராட்டத்தில் ஆண்களுக்கு இணையாக பெண்களும் களமாடி வீரச்சாவு அடைந்துள்ளனர். அர்ப்பணிப்பு, தற்கொடை நிறைந்த இந்த விடுதலைப்பயணம் 2009இல் மௌனிக்கப்பட்டது. பதினாறு ஆண்டுகளை கடந்துள்ள இவ்வேளையில் ஈழப்போராட்டத்தின் ஆரம்பப் புள்ளிகளில் ஒருவரான சி.புஸ்பராணி அக்கா பிரான்ஸ் மண்ணில் காலமான செய்தி துயரத்தைத் தந்தாலும், அவரது நினைவுகள் என்றும் நீங்காத நினைவலைகளாகத் தொடரும் ஒரு காலத்தின் குறியீடாக அவர் நிலைத்து நிற்பார் என்று நம்புகிறேன்.

எழுத்தாற்றல் மிக்க அவரின் எழுத்துகளைச் சுமந்து வரும் ‘புஸ்பராணி -தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிகள்’ நூல் பிரான்ஸில் மே 31 ஆம் திகதி அவரது நினைவஞ்சலி நிகழ்வில் வெளியீடு காண்கிறது. 1950 பெப்பிரவரி 28 யாழ்ப்பாணம் மயிலிட்டி கிராமத்தில் ஆறு சகோதரர்கள் ஆறு சகோதரிகளுடன் பிறந்தவர். தனது 75 ஆவது வயதில் 2025 ஏப்பிரல் 17 அன்று இயற்கை எய்தினார். அரசியல் போராளியாக பல களங்களைக் கண்டவர். சுதந்திர உணர்வு கொண்டதனால் அரச படைகளின் தாக்குதலுக்கு உள்ளானவர், சிறைக்கூடங்களில் சித்திரவதைகளை அனுபவித்தவர். அவரது குடும்பத்தினர் பல நெருக்கடிகளை கடந்தனர்.

மாறி மாறி ஆட்சிபீடமேறிய சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தினர். கல்வி, அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் என அனைத்திலுமே இந்த நிலைகாணப்படுகிறது. புஸ்பராணி அக்கா வெளிப்படையாகப் பேசும் பண்புள்ளவர். தனக்குச் சரியெனப்பட்டதைத் துணிவுடன் கூறுபவர். பல சந்தர்ப்பங்களில் இதனை நேரிலே கண்டிருக்கிறேன். இவர் உட்பட சகோதரன் புஸ்பராசா போன்ற தமிழ் இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்ட வேளைகளில் எங்களின் கதாநாயகர்களாக பாடசாலை நாள்களில் கொண்டாடியிருக்கிறோம். பத்திரிகைச் செய்திகள் மூலம் இவர்கள் அனுபவித்த சித்திரவதைகளை வாசித்து வாசித்து இவர்கள் மீது இனம் தெரியாத பற்றுதல் ஏற்பட்டது. குறிப்பாக புஸ்பராணி அக்கா யாழ்ப்பாணம் கோட்டையிலுள்ள கிங்ஸ் சிறையில் வைத்து தமிழ் பொலிஸாரே உயிர் போகும் அளவுக்கு பெண் என்றும் பார்க்காது கொடும் வதைகளை மேற்கொண்ட செய்திகள் எங்கள் இதயங்களை பிளந்தன. இவர்களை நேரில் சந்திக்க மாட்டேனா? என்று ஏங்கிக்கொண்டிருந்தேன். பிரான்ஸில் இவர்களை சந்தித்து எனது உணர்வுகளை பகிர்ந்தேன்.


‘ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம்’ என்னும் நூல் புஸ்பராஜா வெளியிட்டபோது, அவரின் கையாலே அந்தப் புத்தகத்தை பெற்றுக்கொண்டேன். பாரிஸில் நடைபெறும் இலக்கிய கூட்டங்களில் புஸ்பராணி அக்காவை சந்திப்பதுண்டு. சில வேளைகளில் தொலைபேசியிலும் உரையாடுவதுண்டு. கொரோனா காலத்தில் கொவிட் தொற்றின் காரணமாக நோய்வாய்பட்டார். நுரையீரல் பாதிக்கப்பட்டது. உடலியக்கத்துக்கு தேவையான ஒட்சிசன் போதுமான அளவு அவருக்கு கிடைக்கவில்லை. அதனால் ஒட்சிசன் கருவியுடன் வாழ்ந்தார். இது அவருக்கு சௌகரியமற்று இருந்தது.

எதனையும் எதிர்கொள்ளும் மனோநிலை அவருக்கு இருப்பதால் ‘நீங்களும் ஒரு இரும்பு பெண்’ என்று அவருடன் கூறுவேன். தான் வாசித்த புத்தகங்கள், தனது எழுத்துகளைப்பற்றி பேசுவதுடன் முகநூலில் அதனைப்பதிவு செய்வார். அவரின்கட்டுரைகளை வாசிக்கும் போது ‘பத்திரிகைகளில் வெளியாகும் செய்திக் கட்டுரைகள், பத்தியெழுத்துகளுக்கு நிகராக இருக்கிறது. நீங்கள் ஊடகத்துறையில் இருந்திருக்க வேண்டியவர்.’ எனக் கருத்து கூறுவேன்.

லண்டன் முரசு பத்திரிகையில் ஊதியமில்லாத நிருபராக இருந்த கதைகளை சொல்வார். செய்தி, சுதந்திரன் போன்ற பத்திரிகைகளில் அக்காவின் கவிதைகள் உட்பட பல படைப்புகள் வெளிவந்திருக்கின்றன. மலரரசி அக்காவின் இன்னொரு பெயரடையாளம். மலர்களோடு பேசுவார். இயற்கையை நேசிப்பவர். மரங்கள், தாவரங்கள் மட்டுமல்ல ஐந்தறிவு ஜீவன்களை நேசித்தவர். தான் வளர்த்த சூரியாவை தனது பிள்ளையாக நேசித்தார். அதனுடன் பழகும் நல்ல தருணங்களை அவ்வப்போது முகநூல்ப் பக்கத்தில் வெளியிடுவார். தனது பேரப்பிள்ளைகளுடன் சூரியா இருக்கும் காட்சிகளையும் வெளியிடுவார். பெயர் சூட்டுவதிலும் அவர் வல்லவர். தனது பேரக்குழந்தைகளுக்கு அழகான தமிழ்பெயர்களைச் சூட்டிய அவர் மகளுக்கு தரங்கினி என பெயர் வைத்துள்ளார். பெயர் விளக்கம் அறிய முனைந்த பொழுது, தரங்கம் என்றால் கடல்அலை இனி என்றால் இனிமை அலையின் இனிமை என்று விவரித்தார். இவ்வாறு எந்தப்பொருளையும் புரியும்படி கூறுவார்.

வயதில் மூத்தவர் என்பதால் அக்கா என்றுதான் அவரை அழைப்பேன். அவரிடமிருந்து கற்றுக்கொண்டவைகள் வழி நெடுகக் கைகொடுக்கும். அவரது முகநூல் மகுடவாசகம் “நான் நானாக இருத்தல்” இப்பொழுதும் அந்த பக்கங்களை மீள் வாசிப்பு செய்பவர்களில் ஒருவனாக தொடர்கிறேன். அது அக்காவின் ஆரோக்கிய பொழுதுகளை நினைவூட்டுகிறது.

இறுதி நாள்களை அக்கா எண்ணிக்கொண்டிருந்தார். அவரை நேரில் சென்று தரிசிக்க வேண்டுமென காத்திருந்த பொழுது காலமானார் என்ற செய்தி என் கண்களை குளமாக்கின. புஸ்பராணி அக்கா என்ற ஆளுமை ஒரு காலத்தின் குறியீடு. பிரான்ஸின் ஈழ முற்போக்கு




அணியின் பெண் ஆளுமை என்று எழுதப்பட்ட வரிகளில் உண்மை இருக்கிறது. அடக்குமுறைகளுக்கு அடங்க மறுத்தவர். அதிலிருந்து மீண்டும் மீண்டும் எழுந்தவர். நிமிரும், திமிரும் அவருடன் கூடப்பிறந்தவை இறுதிவரை சிங்கப் பெண்ணாகவே வாழ்ந்தவர். சாதி அடக்குமுறை, பெண்ணிய அடக்கு முறை, அரச அடக்கு முறையென அனைத்து அடக்கு முறைகளையும் சந்தித்தவர். இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக எதிர்வினையாற்றியவர்.

“இறந்த பின் கண்ணீர் அஞ்சலிகள் போடுவதைக் காட்டிலும் உயிரோடிருக்கும் போது நேரில் பார்த்துப் பேசுங்கள் அல்லது தொலைபேசியிலாவது கதையுங்கள்.” என்று அக்காவின் இறுதிக்கால முகநூல் பதிவில் இருக்கிறது. இந்த மண்ணிலிருந்து விடைபெற போகிறேன் என்பதனை உணர்ந்த காரணத்தினாலேயே அக்கா இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

பழகியவர்களுடன் முரண்பாடுகள் இருந்தாலும் அவர்களுடன் அன்பு கொண்டவர். அவரது அரசியல் பயணத்தில் இணைந்திருந்த பலர் இன்று வேறு வேறு திசைகளில் பயணித்தாலும் அவர்களை எதிர்பாராமல் சந்திக்கும் வேளைகளில் மனம் கோணாது உரையாடுவார்.

தமிழ்ப் போராளி ஒருவர் 1970 களில் புஸ்பராணி, புஸ்பராஜா ஆகியோருடன் ஒன்றாக இயங்கியவர். இவர்களது மயிலிட்டி வீட்டில் ஒரு வருடத்துக்கு மேலாக தலைமறைவாக இருந்தவர். பிரான்ஸில் வசித்தபோதும் தொடர்புகள் இல்லாது இருந்தனர். புஸ்பராஜா மரணத்தின் விளிம்பில் நின்றபோது சந்திக்க விரும்பியவர்களில் ஒருவர். அந்த போராளியின் இறுதி நிகழ்வில் புஸ்பராணி அக்கா கலந்து கொண்டு இறுதி அஞ்சலியை செலுத்தினார். அந்த நிகழ்வுக்கு வந்த ஒரு காலத்தில் கூடவிருந்த அரசியல் தோழர்களை நீண்ட காலத்துக்குப் பின் சந்தித்தது மரண வீட்டிலும் மகிழ்ச்சி என்று கூறினார்.

“முரண்பாடுகளுக்காக முகத்தைத் திருப்பி வெறுப்பு காட்டும் அரசியலை அடியோடு வெறுப்பவள் நான். ஒரே இலட்சியத்துக்காக வேறு வேறு தடங்களில் நாம் பின்னாளில் நடந்திருந்தாலும் எல்லாமே உன்னதமானவை. நாம் அன்பாயிருந்த நாள்கள். அவையும் உண்மையானவையே” என்று பதிவு செய்த அவர் எம்மை ஊடுருவி எம்மோடு இரண்டறக் கலந்த இயல்பான எழுத்து நடையால் மனதை சிதறடிக்க வைத்த எழுத்தாளர்களையும் மிக சிறந்த கலைஞர்களையும் அவர்கள் உயிரோடு இருக்கும் காலங்களில் கண்டெடுத்துப் புகழ மறுக்கும் நாம் அவர்கள் மறைவுக்கு பின்னரே தூக்கத்தில் இருந்து திடுக்கிட்டு எழுந்தவர் போல் அவர் தம் நினைவுகளையும் அவர்கள் மேல் நாம் கொண்ட உண்மையான நேசிப்பையும் உணரத்தலைப்படுகிறோம், பேசவும் புறப்படுகிறோம்” என முகநூலில் இன்னொரு பதிவில் தெரிவித்துள்ளார்.

தனக்கு சரியெனப்பட்டதை எழுதவும் தயங்க மாட்டார். அக்கா ஒரு புத்தகப்பிரியர். வாசிப்பதுடன் மட்டும் நின்று விடாது வாசிப்பு அனுபவங்களை வெளியிட்டு ஏனையவர்களையும் வாசிக்க தூண்டுவார். கல்கி, மு.வரதராசா, நா.பார்த்தசாரதி, சாண்டில்யன், அகிலன், புதுமைப்பித்தன், அம்பை, ஜெயகாந்தன், பிரபஞ்சன், சுந்தரம் ராமசாமி, ஜெயமோகன் போன்றவர்களின் படைப்புகளை விரும்பி வாசிப்பவர். அதுமட்டுமல்லாமல் ஏனைய எழுத்தாளர்களின் நூல்களையும் வாசிப்பவர். குறிப்பாக இன்றைய எழுத்தாளரின் எழுத்துகளையும் வாசிப்பவர். நாவல், சிறுகதை மட்டுமல்ல கவிதை நூல்களிலும் கவனம் செலுத்துவார்.

அரசியல் சமூக செயற்பாட்டாளர், எழுத்தாளர் போன்ற அடையாளங்களின் சொந்தக்காரியான அவர் 2012 சுய வரலாற்று நூலான அகாலம் நூலை பாரிஸில் வெளியிட்டார். யாழ்ப்பாணத்தில் சிறையிலிருந்த நாள்களில் தனக்கு பொலிஸாரால் செய்யப்பட்ட சித்திரவதைகளை கண்டு கண்ணீர் விட்டு அழுததுடன் அன்று ஆறுதலாக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் செல்வரத்தி[illegible] பல வரலாற்று தகவல்களை கொண்ட அகாலம் நூல் ஈழப்போராட்டத்தில் ஒரு சாட்சியமாக இருக்கின்றது.

லண்டன் நகரில் 2017 ஆம் ஆண்டு அகாலம் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது. அரசியல் மற்றும் இயக்க வேறுபாடுகளை கடந்து பிரித்தானியாவிலுள்ள தமிழ் உணர்வாளர்களை நிகழ்வில் கண்ட புஸ்பராணி அக்கா புல்லரித்துப்போனார். எல்லோரையும் பார்த்து எனது உள்ளம் பூரிக்கிறது என வாஞ்சையுடன் பேசினார். “ஆரம்பகால போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் ஒற்றுமையாக இயங்கினோம் இன்று பிரிந்து விட்டோம். வேறு வேறு திசைகளில் பயணிக்கிறோம். அன்று நேசித்தவர்களை இன்றும் நேசிக்கிறேன். கருத்து வேறுபாடுகள் நிறைய இருக்கலாம். எங்களுக்குள் எதிரிகள் போன்று மனப்பான்மை இல்லை. தமிழீழப்போராட்டம் என்றோ வெற்றி பெற்றிருக்கும் எதிரிகளுக்காக தூக்கப்பட்ட துப்பாக்கி எம்மவரை நோக்கி எப்போது திருப்பப்பட்டதோ அதுவே போராட்டத்துக்கான தோல்விக்கு வித்திட்டது.” இவ்வாறு தனது உணர்வுகளை வெளியிட்டார்.

சாதிய சமூக விடுதலைப்பார்வைக்கும் மிகுந்த ஆதரவை தந்தவர் புஸ்பராணி அக்கா என்பதை இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி தெரிவித்துள்ளது.

பிரான்சிலும், லண்டனிலும் நடத்தப்பட்ட தலித் மாநாடுகளில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியவர். மேலும் பல சாதிய எதிர்ப்பு நடவடிக்களில் பங்கெடுத்தவர் என்று முன்னணி தெரிவித்துள்ளது.

சோபாசக்தி, கோமகன் இரு எழுத்தாளர்களும் தனித்தனியாக அக்காவுடன் நேர்காணல் நிகழ்த்தி ஏற்கனவே வெளியிட்டுள்ளனர். ‘நான் எப்போது அடிமையாயிருந்தேன்’ என தலைப்பிட்டு செப்ரெம்பர் 2009 சோபாசக்தியும், ஜீவநதி 2016 கார்த்திகை இதழில் “பெண்கள் உடல் அரசியலை ஆண்கள் பேசலாமென்றால், பெண்கள் ஏன் உடல் அரசியலைப் பாடக்கூடாது” என்று தலைப்பிட்டு அமரர் கோமகனும் வெளியிட்டனர். சமூகம்,பெண்ணியம், சிறை அனுபவங்கள் பலவற்றையும் குறிப்பிட்ட நேர்காணல்களில் வெளிப்படையாக பேசியுள்ளார். 1980 ஆம் ஆண்டு புலோலி வங்கி கொள்ளை தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டார். தடுப்புக்காவலில் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக தாக்கப்பட்டு வதைக்கப்பட்டதாகவும், தனது அலறல் சத்தம் பொலிஸ் விடுதி வரை கேட்டதாக பலர் கூறினார்கள் என்றும், என்னை அடித்த தடிகள் கண்முன்னே தெறிந்து விழுந்தன. நான் அரை நிர்வாணமாக மயக்க நிலையில் கிடந்தேன். அடித்த அடியால் எனக்கு உரிய நாட்களுக்குள் மாதவிடாய் வந்துவிட்டது. வழிந்து கொண்டிருந்த உதிரத்தை தடுப்பதற்கு எந்த வழியுமில்லாமல் ஒரு பொலிஸ்காரர் அழுக்காக இருந்த பழைய சாரத்தை கொடுத்தார். அதனை துண்டு துண்டாக கிழித்து கட்டிக்கொண்டேன். ஆண்டுகள் பல கடந்தும் சிறையில் தான் அனுபவித்த வேதனைகளை நேர்காணலில் பகிர்ந்துள்ளார்.

யாழ்.கோட்டை கிங் கவுஸ், வெலிக்கடை சிறைகளில் ஆறு மாத காலம் கடுமையான தண்டனையை அனுபவித்த அவர் தீர்ப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

“சிறையிலிருந்து வெளிவந்த என்னை சமூகம் கொடூரமாக எதிர்கொண்டது. பொலிஸாரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டவள் என நான் ஒதுக்கப்பட்டவளானேன். அப்போது இயக்கம், விடுதலைப்போராட்டம் பற்றியெல்லாம் பொதுப்புத்தி மட்டத்தில் எந்தப்புரிதலும் இருக்கவில்லை. எனக்கு கொள்ளைக்காரி என முத்திரை குத்தப்பட்டது. 26 வயதான இளம் பெண்ணான நான் மனம் உடைந்து போனேன்.

விடுதலை அரசியலில் எனக்கு ஈடுபாடு இருந்த போதும் அந்த ஈடுபாடு இன்று வரை தொடரும் போதும் நான் இயக்கத்துடன் சேர்ந்து வேலை செய்யவிரும்பவில்லை. அழைப்பு வந்தபோதும் இயக்க பணிகளில் ஈடுபட மறுத்துவிட்டேன்.” என்றும் அவர் பதிவு செய்துள்ளார்.

1970 ஆம் ஆண்டு தமிழ் இளைஞர் பேரவை மகளிர் அமைப்பாளராக இருந்தார். 1975 தமிழீழ விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அதில் தீவிர செயற்பாட்டாளராக பங்கெடுத்தவர். அன்றைய போராளிகளுக்கு உணவு அளித்து பாதுகாத்தவர், அடைக்கலம் வழங்கியவர்.

“விடுதலைப்போராட்டம் தோல்விக்கான முதற்காரணமும் கடைசிக்காரணமும் இயக்கங்களின் அராஜகப் போக்குகள் தான். எதிரியை கொல்கிறோம் எனப்புறப்பட்டவர்கள் எமது சமூகத்தின் போராளிகளையும், அறிவுஜீவிகளையும் ஒழித்துக்கட்டினார்கள். இலங்கையில் மட்டுமல்ல புகலிட தேசங்களிலும் ஒவ்வொரு தமிழனும் வாயை த்திறக்கவே பயப்படுகிறான். அங்கே ஆரம்பித்தது தமிழீழப்போராட்டத்தின் தோல்வி” இவ்வாறு நேர்காணல்களில் தெரிவித்த அவர், “மற்றவர்களுக்காக எதையும் சமரசம் செய்வதில் எனக்கு எப்போதும் உடன்பாடு இருந்ததில்லை. இது எனது பிறவிக்குணம் என்றே நினைக்கிறேன். நான் படிக்கும் காலத்திலே இதை என்னால் உணரமுடிந்தது. முகத்துக்காக எதையும் செய்வதையோ, பேசுவதையோ வெறுக்கிறேன். நான் நானாக இருப்பதையே விரும்புகிறேன்.” என்றும் அவர் தெரிவித்தார்.

ஈழ வரலாற்று பக்கத்தில் அக்கா போன்றவர்கள் தனி அத்தியாயத்தில் இடம்பெறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் காணிகளை கையகப்படுத்தும் அரசின் முயற்சிகளை தடுப்பதற்கு அரசியல் அழுத்தங்களே அவசியமானவை!

கந்தையா அருந்தவபாலன்

இலங்கையில் தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடமான வடக்கு கிழக்கிலுள்ள காணிகளை அரசாங்கம் திட்டமிட்டு அபகரிக்கும் முயற்சிகள் நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தொடர்ந்து முனைப்புப் பெற்று வருவதை அவதானிக்க முடியும். அரசு என்ற வகையில் சட்டரீதியாகவும் அதற்குப் புறம்பாகவும் காடுகள், சரணாலயங்கள், சூழல் பாதுகாப்பு, விவசாயம், குடியிருப்பு, தொல்பொருட்கள், மகாவலி, தேசிய பாதுகாப்பு என்ற பல பெயர்களில் தமிழரின் பாரம்பரிய நிலங்களும் வாழ்விடங்களும் தொடர்ந்து அரசினால் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழர் தாயகத்தின் தொடர்ச்சியைத் துண்டாடுவது, கெடுபிடிகளின் மூலம் தமிழ் மக்களை அவர்களின் சொந்த வாழ்விடங்களிலிருந்து விரட்டுவது, சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழர்களைச் சிறுபான்மையினராக மாற்றுவது, பௌத்த சின்னங்களை நிறுவி அதன்மூலம் சிங்கள மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் என புனைவது என இந்த முனைப்புகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ்வாறு கிழக்கில் தொடங்கிய நில அபகரிப்புகள் படிப்படியாக விரிவடைந்து கடந்த மார்ச் மாதம் 28 ஆந்திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி மூலம் இப்போது வடக்கில் குடாநாட்டு மக்களின் முற்றத்தில் அது வந்து நிற்கிறது.


கடந்த மார்ச் மாதம் 28 ஆந்திகதி வெளியிடப்பட்ட 2430 இலக்கமுடைய மேற்படி வர்த்தமானி அறிவித்தல் 1931 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பெயரில் வெளியிடப்பட்டுள்ள ஒன்றாகும். 1931 ஆண்டு பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட இச்சட்டம் உண்மையில் உரிமை கோரப்படாத காணிகளை கையகப்படுத்தி காணிகளற்ற அப்பிரதேச மக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. அதனை ஒரு கவசமாகப் பயன்படுத்தி மக்களின் எதிர்ப்புகளின்றி குறித்த காணிகளை அபகரிப்பதற்கான அரசாங்கத்தின் ஒரு சதித்திட்டமாகவே தமிழ்மக்கள் தமது கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் இதனைப் பார்க்கின்றனர். குறித்த வர்தமானி அறிவித்தலின்படி வடக்கில் வவுனியா தவிர்ந்த ஏனைய மூன்று மாவட்டங்களிலும் கரையோரங்களை அண்டியுள்ள மொத்தமாக 5941 ஏக்கர் காணிகள் இதன் கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 3669 ஏக்கரும் முல்லைத்தீவில் 1703 ஏக்கரும் கிளிநொச்சியில் 515 ஏக்கரும் மன்னாரில் 54 ஏக்கரும் இவ்வாறு பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. மூன்று மத காலத்தினுள் அதாவது யூன் 28 ஆந் திகதிக்கு முன் மேற்படி பட்டியலிட்பட்ட காணிகள் அதன் தற்போதைய உரித்தாளர்களால் தகுந்த முறையில் உறுதிப்படுத்தப்படாதவிடத்து அவை அரசுக்குச் சொந்தமான காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும்.

இவ்வாறு அரச வர்த்தமானிமூலம் பட்டியல்படுத்தப்பட்ட காணிகள் பல வகைப்பட்டவையாகக் காணப்படுகின்றன. முறையான உரித்தாவணங்களைக் கொண்டுள்ள தனியார் காணிகள். ஒன்றுக்கு மேற்பட்ட தலைமுறைகளாக குறித்த காணிகளில் வாழ்ந்து தமது உரித்தாகக் கருதிய காணிகள். இக்காணிகள் ஆட்சியுரிமைச் சட்டத்திற்கமைய அவர்களுக்கு உரித்துடையதாயினும் முறையான ஆவணங்கள் எதுவும் பெறப்படாதவை. நிழல் அரசாக ஆட்சியுரிமையை வைத்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் காணி நிர்வாகப் பிரிவினால் மக்களுக்குக் கையளிக்கப்பட்ட காணிகள். இக்காணிகளுக்கும் முறையான உரித்தாவணங்கள் இல்லை. இவை தவிர இன்னொரு பகுதி குறித்த பிரதேச மக்களின் சமூகப் பயன்பாட்டுக்குரிய பொதுக்காணிகள்.

மேற்குறிப்பிட்ட காணிகளின் வகைப்பாடுகளை நோக்கினால் பெரும்பாலான காணிகளின் சொந்தக்காரரர்கள் அவற்றுக்கான உரித்துடைய ஆவணங்களைச் சமர்ப்பிப்பது இலகுவானதொன்றல்ல என்பது வெளிச்சம். காணிகளுக்கு முறையான உறுதி போன்ற ஆவணங்கள் கொண்டிருந்தவர்கள்கூட அதனை உரிய காலத்தினுள் சமர்க்க முடியுமா என்பதும் கேள்விக்குறி. இவர்களைப்பொறுத்து முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கூறிய ஒரு வார்த்தை மிகப்பொருத்மானது. “கோவணத்துடன் ஓடிய மக்களிடம் ஆவணத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?” மேலாக அக்காணிகளின் உரித்தாளர்கள் இருக்கிறார்களா? இல்லையா? இருந்தால் உள்நாட்டிலா? வெளிநாட்டிலா? உரித்தாளர்கள் உயிரோடு இல்லாவிட்டால் அவர்களின் பின்னுரித்தளர்க்களுக்கு அக்காணிகள் பற்றித் தெரியுமா? தெரிந்தாலும் அது தொடர்பான உரித்தாவணங்களை உடனடியாக ஆக்கமுடியுமா? இவைபோல ஆட்சியுரிமையினூடாக உரித்துப் பெறக்கூடியவர்கள் அதனை உடனடியாகப் பெற முடியுமா? விடுதலைப் புலிகளால் பகிரந்தளிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் அதை எப்படி உறுதிப்படுத்துவது. உறுதிப்படுத்தினாலும் சட்டம் அதை ஏற்றுக்கொள்ளுமா? மூன்று மாத காலத்தினுள் அதுவும் ஒன்றரை மாதங்கள் கடந்துவிட்ட இச்சூழ்நிலையில் இவையெல்லாம் சாத்தியப்படுமா? இவை தவிர சமூகப் பொதுப்பயன்பாட்டுக்குரிய காணிகளின் நிலைப்பாடு என்ன? இப்படி நூற்றுக்கணக்கான கேள்விகள் இவ்விடயம் தொடர்பாக எழுந்து நிற்கின்றன. இவ்வாறானதொரு சிக்கல் நிலையில் இப்பிரச்சினைக்கு சட்டரீதியான அணுகுமுறை எவ்வளவுதூரம் பயனளிக்கும் என்று சிந்திக்கவேண்டும். சட்டரீதியாக அணுகுவதென்றாலும் தனிப்பட்ட உரித்துகளை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக அரசின் இம் முன்னெடுப்பு குறிப்பிட்ட பிரதேச மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயல் என்ற வகையிலேயே அணுகப்படுவதே பயனுடையதாக இருக்கும்.



> காணிகளைக் கையகப்படுத்துதல் தொடர்பான அரசாங்கத்தின் இத்தகைய முயற்சிகளினால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகள் தொடர்பாக தமிழ் மக்கள் அறிவூட்டப்படுவது அவசியமாகும். பிரச்சினை தன்வீட்டு முற்றத்துக்கு வந்தபின் ஒவ்வொருவரும் உணர்வதாலும் செயற்படுவதாலும் எதுவும் ஆகப்போவதில்லை.



இலங்கையின் வடக்கு கிழக்கு நிலப்பரப்பு இந்நாட்டின் தேசிய இனமான தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம். அதனால்தான் அது தமிழ்த் தேசியப் பிரச்னை என்பதனுள் முதன்மை பெறுகிறது. அதன்காரணமாகவே தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு மாகாண சபைகளைக் குறைந்தமட்டத் தீர்வாக முன்மொழிபவர்கள்கூட அச்சபைகளுக்குக் காணியதிகாரம் முழுமையாகக் கையளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் எந்தவொரு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு முயற்சியெடுக்காத இந்த அரசாங்கம் முன்னைய அரசாங்கங்களைப் போலவே அம்மக்களின் காணிகளைப் பறிப்பதில் தீவிர அக்கறை காட்டுவது என்பது ‘தமிழ்த் தேசியப்பிரச்சினை என்று ஒன்றில்லை. அவர்களுக்கு இருப்பது வெறும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே’ என்ற ஜே.வி.பியின் அடிப்படைச் சித்தாந்தத்தின் பிரதிபலிப்பு என்பதை விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகிறது. எனவேதான் தமிழ்த்தரப்புகள் இதனை வெறும் சட்டப் பிரச்சினையாக அணுகாது தமிழ்த்தேசியம் சார்ந்த ஓர் அரசியல் சவாலாக அணுகவேண்டிய தேவை எழுந்துள்ளது.

வடக்கு கிழக்கிலுள்ள காணிகள் தொடர்பான அரசாங்கத்தின் எந்தவொரு முன்னெடுப்பும் பின்வரும் இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் அமைவதே நீதியானதாக அமையும். ஒன்று முதலில் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல்தீர்வுகளை உள்ளடக்கிய புதிய அரசிலமைப்பை உருவாக்குதல். இரண்டாவது தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறிய மக்கள் அனைவரும் மீண்டும் தமது இடங்களில் வந்து குடியமர்த்தல். இவ்விரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டபின் நியாயமானதொரு காலத்தவணையின் பின் காணிகள் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதே பொருத்தமானது. உண்மையில் தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு என்பது காணி அதிகாரத்தையும் உள்ளடக்கிய ஓர் ஆட்சிக்கட்டமைப்பாகவே இருக்க முடியும். அந்த வகையில் அக்கட்டமைப்பின் அனுமதியுடன் நாட்டின் தேசிய தேவைகளுக்காக மத்திய அரசு காணிகளைப் பயன்படுத்தவது தொடர்பாக சிந்திக்கும் நிலை உருவாக்கப்படுவதே ஆரோக்கியமாகும். இந்தவகையில் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் என்பது தமிழ்த் தேசிய அரசியல் சார்ந்த ஒரு பிரச்சினையாகும். அதனால் அப்பிரச்னைக்கான தீர்வு என்பது சட்டத்துக்கு அப்பால் அரசியல் சாரந்ததொன்றாகவே இருக்க முடியும். எனவே அரசாங்கத்தின் மீது அரசியல் அழுத்தங்களை ஏற்படுத்துவதே இன்று தமிழ் மக்கள் முன்னுள்ள ஒரே தெரிவாகும்.

இதனைக் கருத்திற் கொண்டே தமிழ் அரசியல் தலைவர்கள் களத்தில் செயற்படத் தொடங்கியிருப்பதைக் காண முடிகிறது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், சிறீதரன், ரவிகரன் போன்றோர் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாகக் காட்டமான கேள்விகளை தொடுத்திருக்கிறார்கள். அத்துடன் தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் தலைமையில் அப்பேரவையின் கட்சித் தலைவர்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து விளக்கி வருவதையும் காணமுடிகிறது. சமகாலத்தில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலர் சுமந்திரன் இதனை ஆட்சேபித்து ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளதுடன் இம்மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் குறித்த வரத்தமானி அறிவித்தலை மீளப்பெறாவிடின்

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியுக்தியார் பதில்கள்

**சிவபாலன் செந்துஜன்,**
**கதிரேசு வீதி, வவுனியா.**

**கேள்வி:** வடக்கில் காணி அபகரிப்பு நோக்கத்திற்காக அரசு வெளியிட்ட வர்த்தமானியை உடன் இரத்துச் செய்ய தென்னாபிரிக்க அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தென்னாபிரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளாரே. அதுமட்டுமன்றி அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, கனடா தூதுவர்களையும் சந்தித்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார். இந்தப் பிரச்னையை இவ்வாறு தூதுவர்களைச் சந்தித்து கோரிக்கை விடுப்பதன் மூலம் மட்டும் தீர்த்துவிடமுடியுமா?



**வியுக்தியார்:** இது ஓர் உடனடிப் பிரச்னை. அரசாங்கம் பல ஆயிரம் ஏக்கர் காணிகளை உரியவர்கள் உறுதிப்படுத்த மூன்று மாத அவகாசத்தை வழங்கியிருக்கின்றது. அந்த மூன்றுமாத காலக்கெடுவில் காணி உரிமையாளர்கள் தமது உரித்தை உறுதிப்படுத்த முடியாது என்பதும் நமக்கு மாத்திரமல்ல, அந்த வர்த்தகமானியை வெளியிட்டவர்களுக்கும் நிச்சயம் தெரிந்திருக்கும். நாம் இதுபோன்ற பல்வேறு வழிகளிலும் அதற்கு எதிராக எதிர்வினைஆற்றாமல் இருப்பது புத்திசாலித்தனமானது அல்ல. அதனால் கஜேந்திரகுமார் போன்றவர்கள் எல்லா வழிகளிலும் அதற்காக முயற்சிப்பது தவறானதல்ல. ஆனால், இன்று இவர்களின் எதிர்ப்பு காரணமாக அரசாங்கம் காணிகளை அரசுடமையாக்குவதை நிறுத்தி வைத்தாலும்கூட அது மூன்று மாத அவகாசத்தின் பின்னர் நடப்பது எப்போதும் ஆபத்தானதே. அந்த வர்த்தமானி அறிவித்தலை திரும்பப்பெறாமல், காணிகளை சுவீகரிக்கமாட்டோம் என்று மட்டும் அரசு கூறிவிட்டு அமைதியாக இருந்தால், மூன்றுமாத காலக்கெடு முடிவடைந்த பின்னர் திடீரென்று அவை அரசுடமை என்று அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே கஜேந்திரகுமார் மாத்திரமல்ல அனைத்து தரப்பினரும் அதற்கு எதிராக குரல்கொடுக்கத்தான் வேண்டும். சுமந்திரன் ஒருபடிமேலே சென்று அரசுக்கு காலக்கெடு விதித்திருக்கிறார். இல்லையென்றால் போராட்டம் வெடிக்கும் என்றிருக்கிறார். அந்த விடயத்திலும் நமது கட்சிகள் தனி ஆவர்த்தனம்தான் செய்துகொண்டிருக்கின்றன. அனைத்து கட்சிகளும் ஒன்றாக போராடுவது பற்றி இன்னமும் சிந்திக்கவில்லை என்பது நமது தலையெழுத்து.

---

**ப. அபிஷேக்குமார்,**
**எல்லை வீதி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கான வாக்கு வங்கி சரிந்துள்ளதால், மாகாண சபை தேர்தலை நடத்தும் முடிவை அரசாங்கம் பிற்போடக் கூடும் என எதிரணிகள் அச்சம் வெளியிட்டுள்ள அதே வேளை, மாகாண சபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்தும் அரசாங்கத்தின் திட்டம் மாறாது என்று ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாக ஈழநாடுவில் ஒரு செய்தி பார்தேன். அப்படி தேர்தலை நடாத்துவார்கள் என்று நீங்களும் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** மாகாண சபைத் தேர்தலை இந்த அரசாங்கம் நடத்தாமல் ஒத்திப்போடுமானால், ஏற்கனவே ஆறு ஆண்டுகளாக நடக்காமல இருந்த மாகாண சபை தேர்தல் இன்னும் பல ஆண்டுகளுக்கு நடக்க வாய்ப்பு இல்லாமல் போய்விடும். இந்த வியுக்தியாரின் கவலை எல்லாம், மாகாண சபை தேர்தலை நடத்துமாறு ஏன் நமது தமிழ்த் தேசியக் கட்சிகள் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்பதுதான். தெற்கில் உள்ள கட்சிகளில் பெரும்பாலானவை இந்த மாகாண சபைகளுக்கு எதிரானவை. அவை தேவையில்லை என்று கருதுபவை. ஆனால், நமக்கு அப்படியல்ல. அது ஒன்றுதான் இத்தனை தசாப்த போராட்டத்துக்கும், இத்தனை இழப்புகளுக்கும் நமக்கு எஞ்சியிருப்பது. அதனையாவது பெற்றுக்கொள்ளாவிட்டால், கற்பனை உலகில் சஞ்சரித்துக்கொண்டே அழிவை நோக்கி நகரவேண்டிதுதான். இந்நிலையில் தெற்கிலிருந்து மாகாண சபை தேர்தலை மட்டுமல்ல, காணி- பொலிஸ் அதிகாரங்களையும் வழங்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை போன்ற அமைப்புகள் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றன. அவர்களுடன் சேர்ந்து நமது அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி சமூக செயற்பாட்டாளர்களும் இணைந்து மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். இன்று காணிகளை சுவீகரிக்க அரசு முயற்சி செய்கின்றது என்று ஒப்பாரி வைக்கும் நாம், மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்களை பெறுவதற்காக தெற்கின் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து போராடவேண்டும். அதுவே அவசியமானது மாத்திரமல்ல, அவசரமானதும்கூட.

---

**அ. சிவகணேஸ்,**
**சங்கரத்தை, வட்டுக்கோட்டை.**

**கேள்வி:** 'வடக்கு காணிகள் குறித்து பிரசுரித்த வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தும் வழிமுறை காணி கட்டளைச் சட்டத்தில் கிடையாது. 03 மாதத்துக்குள் காணி உரித்தை உறுதிப்படுத்தாவின் தமிழர்களின் தனிப்பட்ட மற்றும் பொது காணிகள் அரசுடமை யாக்கப்படும். இனவாதி என்று குறிப்பிடப்பட்ட மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் கூட இந்நிலை ஏற்படவில்லை. இந்த வர்த்தமானியை அரசாங்கம் உடன் வாபஸ் பெற வேண்டும். இல்லையேல் நல்லிணக்கம் முடிவுக்கு கொண்டு வரப்படும்' என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரித்திருக்கிறாரே?



**வியுக்தியார்:** அவருடைய கவலை எல்லாம், நல்லிணக்கம் முடிவுக்கு வந்துவிடும் என்பதுதான் போலும். அதாவது இப்போது நல்லிணக்கம் இருக்கிறது. அது முடிவுக்கு வந்துவிடும் என்கிறார். இதைவிட முக்கியமாக நாம் கவனிக்கவேண்டியது, மகிந்த ராஜபக்ஷவை இனவாதி என்று கஜேந்திரகுமார் குற்றம்சாட்டவில்லை என்பதுதான். அவர் மகிந்த 'இனவாதி என்று குறிப்பிடப்பட்ட ஒருவர்' என்றுதான் சொல்கிறார். அதாவது மற்றவர்களால் இனவாதி என்று குறிப்பிடப்பட்டவர் என்கிறார். இதன்மூலம் அவர் தெளிவாக சொல்ல வருவது, மகிந்தவை தான் இனவாதி என்று குறிப்பிடவில்லை என்பதுதானோ?

---

**ஆர். புஸ்பகாந்த்,**
**2வது ஒழுங்கை, தெகிவளை.**

**கேள்வி:** கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்று முன்னறிவிப்பின்றி செயல்பாடுகளை நிறுத்திவிட்டதாகக் கூறப்படுகிறதே. நெக்ஸ்ட் என்ற இந்த பிரிட்டன் நிறுவனமே இவ்வாறு திடீரென மூடப்பட்டது என்றும் இதனால் 1,400இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் திடீரென வேலையிழக்க நேரிட்டுள்ளது என்றும் கூறப்படுகிறதே?

**வியுக்தியார்:** இந்தச் செய்தியை நானும் படித்தேன். இதுகுறித்து நமது தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் பல சந்தேகங்களை கிளப்பி அறிக்கை வெளியிட்டிருந்தார். இந்தச் செய்தி ஒரு செய்தியாக அல்லாமல் பல செய்திகளை சொல்வதாகவே தெரிகிறது. ஒரு வெளிநாட்டு நிறுவனம், இனி இலங்கையில் தொழில்செய்ய முடியாது என்று மூடுகிறது என்பது ஓர் அபாய எச்சரிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்களை வலிந்து அழைத்துக்கொண்டிருக்கும் ஒரு நாட்டிலிருந்து ஏற்கனவே முதலிட்ட நிறுவனமே வெளியேறுகின்றது என்றால், புதிதாக முதலிட வருபவர்கள் ஒன்றுக்கு பல தடவை யோசிக்கவே செய்வார்கள். அதைவிட இன்னுமொரு செய்தி: 1400 மேற்பட்ட ஊழியர்கள் வேலையிழக்க நேரிட்டுள்ளது. நமது நாட்டில் ஊழியர் ஒருவரை வேலையிலிருந்து நீக்குவதெனில் அதற்கு பல நடைமுறைகள் உண்டு. அவர் பணியாற்றிய காலங்களுக்கு ஏற்ப அவருக்கு பணத்தை வழங்கவேண்டும். ஆனால், அப்படி எதுவுமே வழங்கப்படாமலே ஒரு நிறுவனம் மூடிக்கட்டிக்கொண்டு வெளியேறி விட்டது என்றால், தொழிலாளர்களுக்கான பாதுகாப்பும் அல்லவா கேள்விகுறியாகியிருக்கின்றது.

---

**கே. ராம்குமார்,**
**பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** 'இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என மறுத்து வந்திருப்பதுடன், அவை தொடர்பில் நம்பத் தகுந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன. இந்நிலையில் தற்போதைய அரசாங்கமே னும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்விகளைச் சீர்செய்து, நீதியையும் பொறுப்புக் கூறலையும் நிலைநாட்டுமா என சர்வதேச மன்னிப்பு சபை கேள்வி எழுப்பியுள்ளதே.

AMNESTY
INTERNATIONAL

**வியுக்தியார்:** இலங்கையில் தமிழ் இன அழிப்பு இடம்பெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாக அண்மையில் கூறியிருந்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இனஅழிப்பு போன்ற கருத்துக்கள் பகிரப்படுவதற்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தார். நல்லவேளை, சர்வதேச மன்னிப்புச் சபை போர்க்குற்றங்கள் என்று மட்டும் குறிப்பிட்டிருக்கிறது. இன அழிப்பு என்று குறிப்பிட்டிருந்தால், அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி வந்திருக்கும்.

---

**நடராஜா ரவீந்திரன்,**
**பாசையூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** 'யுத்தம் நிறைவடைந்த பின்னர் 16 ஆண்டுகள் கடந்துள்ள போதும் இராணுவத்தின் நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டதாக என் மனச்சாட்சிக்கு ஒப்புக்கொள்ள முடியாது, நான் யுத்தம் நடத்திய காலத்தில் 80 யுத்த டாங்கிகள் இருந்தன. யுத்தம் முடிந்த பின்னர் அவை 30ஆகக் குறைந்தன, 50 டாங்கிகள் அழிந்துள்ளன. இப்போது இராணுவத்திடம் 30 யுத்த டாங்கிகள் மட்டுமே உள்ளன. படைப் பிரிவுகளுக்கு யுத்த டாங்கிகள் தேவை. வீரர்கள் மட்டும் இருந்தால் போதாது ஓர் ஆயுதப்படை பிரிவுக்கு ஆயுதங்கள் தேவை' ஏன்று முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளாரே?



**வியுக்தியார்:** அவர் சொல்வது சரியாக இருக்கலாம். ஆனால், யுத்தம் முடிவடைந்து இந்த 16 ஆண்டுகளும் வருடாவருடம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி அதிகரித்துக்கொண்டுதானே போகிறது. அவர்கள் தமக்கு ஒதுக்கப்படும் நிதியில் விகாரைகளை அல்லவா கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இராணுவ தளபாடங்களை எப்படி வாங்குவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினி படுகொலையில் பலஸ்தீன மழலைகள்!

## இஸ்ரேலுக்கு உள்நாட்டு எதிர்ப்பு – உலகளாவிய கண்டனம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உணவு மற்றும் மனிதாபிமான பொருட்களை கொண்டு செல்லும் அனைத்து வழித்தடங்களையும் காஸாவில் அடைத்துவிட்டு 77 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு காஸா மீது மூர்க்கத்தனமான தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் நடத்தி வருகிறது.

கையில் இருந்தவற்றை எல்லாம் இழந்துவிட்டு பாலஸ்தீனிய மக்கள், பசி கொடுமையால் இப்படி கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர். காஸாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள பிணை கைதிகள் அனைவரையும் விடுவிக்கும் வரை போர் ஓயாது என்று சூளுரைத்துள்ள இஸ்ரேல், அகதிகள் முகாம், மருத்துவமனைகள், குடியிருப்புகள் என அனைத்து பகுதிகளையும் குறிவைத்து தாக்குதல் நடத்தி கொண்டு இருக்கிறது.

காஸாவில் இருக்கும் முப்பது வீதமான குழந்தைகள் ஊட்டச் சத்து குறைபாட்டில் இருக்கின்றன. ஐந்து வயதுக்குட்பட்ட 71,000 குழந்தைகள், பட்டினியால் நலிவடைந்து கொண்டு இருப்பதாக ஐ.நா. கூறுகிறது. கர்ப்பிணிகளும் பிறந்த சில மாதங்களே ஆன குழந்தைகளும் உணவு கிடைக்காமல் மரணத்தின் விளிம்பில் இருக்கின்றனர்.

காஸாவுக்கு உணவுப் பொருட்களை அனுப்பாவிட்டால் 48 மணி நேரத்தில் 14,000 குழந்தைகள் உயிரிழக்க நேரிடும் என்று உலக நாடுகளுக்கு ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்னும் ஓர் 'நக்பா' போன்று பட்டினியால் பாலஸ்தீன மக்களை படுகொலை செய்ய இஸ்ரேல் முயன்றுள்ளது. இதற்காகவே காஸாவில் அத்தியாவசிய, மனிதாபிமான பொருட்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் பட்டினியால் உயிரிழந்துள்ளனர். அத்துடன் பசியால் இருபது இலட்சம் மக்கள் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

இஸ்ரேலின் கொடூரமான நடவடிக்கைகளுக்கு பல உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. காஸா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள புதிய நில அடிப்படையிலான போர் நடவடிக்கைகள் உலகளவில் கடும் விமர்சனங்களை சந்தித்து வருகின்றது.

கடந்த சில நாட்களில் மட்டும் பல நூறு பாலஸ்தீனிகள் உயிரிழந்துள்ளனர். கனடா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளின் பிரதமர்கள் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், இஸ்ரேல் தனது போர் நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால், இலக்கிடப்பட்ட தடைகள் உள்ளிட்ட "திடமான நடவடிக்கைகள்" எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளனர்.



இஸ்ரேல் "கிடியனின் ரதங்கள்" என்ற பெயரில் ஒரு புதிய நில போர் நடவடிக்கையை காஸாவில் துவக்கியது. வடகாசா மற்றும் தெற்குக் காஸா பகுதிகளில் இஸ்ரேலிய படைகள் நுழைந்துள்ளன என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைக்கு முன்பு, பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட கடும் விமானத் தாக்குதல்களில், பல குடும்பங்கள் முழுமையாக அழிக்கப்பட்டதாக காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காஸாவுக்குள் ஒரு அடிப்படை அளவிலான உணவுப் பொருட்கள் அனுமதிக்கப்படும் என இஸ்ரேல் அறிவித்திருந்தாலும், ஐ.நா. உதவித் தலைவர் டோம் ஃப்ளெச்சர் இதனை "கடலிலொரு துளி" என விவரித்தார். மேலும் வட காஸாவின் கடைசி செயல்பாட்டிலிருந்த மருத்துவமனையும் மூடப்பட்டுள்ளது.

உள்நாட்டிலேயே போருக்கு எதிராக யூத மக்கள் எழுந்துள்ளமையால், இஸ்ரேல் அரசு ஆட்டம் கண்டுள்ளது. காஸாவில் இஸ்ரேலின் போர் ஒரு புதிய, வன்முறை கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இஸ்ரேலுக்குள்ளேயே இந்தப் போருக்கு எதிராகவும், அது நடத்தப்படும் விதம் குறித்தும் உள் நாட்டிலேயே குரல்கள் வலுத்து வருகின்றன. இந்த அதிர்ச்சி தரும் விமர்சனங்கள், உள்நாட்டில் ஒரு பெரும் விவாதத்தை கிளப்பியுள்ளன.

குறிப்பாக இஸ்ரேலிய முன்னாள் தளபதியின் ஆவேச உரையானது உலகின் பல நாடுகளிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இடதுசாரி அரசியல்வாதியும், இஸ்ரேல் தற்காப்புப் படையின் முன்னாள் துணைத் தளபதியுமான யாயிர் கோலன் வெளியிட்ட கருத்துகள் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன.

"நாம் ஒரு புத்திசாலித்தனமான நாடாக செயல்படத் திரும்பவில்லை என்றால், இஸ்ரேல் தென்னாப்பிரிக்கா போல ஒரு ஒதுக்கப்பட்ட நாடாக மாறிவிடும். ஒரு புத்திசாலித்தனமான நாடு பொதுமக்கள் மீது போர் தொடுக்காது, பொழுது போக்கிற்காக குழந்தைகளைக் கொல்லாது, மேலும் மக்களை இடம்பெயரச் செய்வதை தனது நோக்கமாகக் கொள்ளாது" என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

ஆயினும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, கோலனின் இந்தக் கருத்துக்களை "இரத்தப் பழி" என்று கடுமையாக விமர்சித்தார்.

மேலும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரின் அதிரடி குற்றச்சாட்டு மேலும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும், முன்னாள் தலைமைப் பணியாளருமான மோஷே "போகி" யாலோன் மேலும் ஒரு படி சென்று தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளார்.

தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில், இது ஒரு பொழுதுபோக்கு அல்ல. இது ஒரு அரசாங்கக் கொள்கை, அதன் இறுதி நோக்கம் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதே. இது நம்மை அழிவை நோக்கி இட்டுச் செல்கிறது என்று அவர் பகிரங்கமாகப் பதிவிட்டுள்ளார்.

தற்போது உள்நாட்டிலேயே போர் குறித்த விமர்சனங்களும், அதன் நடத்தப்படும் விதம் குறித்த கேள்விகளும் எழுந்துள்ளன. இது, இஸ்ரேலிய சமூகத்தில் போரின் தாக்கம் மற்றும் அதன் எதிர்காலம் குறித்து ஆழமான கவலைகள் அதிகரித்து வருவதைக் காட்டுகிறது. இந்தப் புதிய குரல்கள், இஸ்ரேலிய அரசியல் மற்றும் சமூகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

●

# ஒருமனதாக தீர்மானம் தேவை!

நா.குருசாமி

பாகிஸ்தான், ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளிலிருந்து செயல்படும் பயங்கரவாதிகளையும், அவர்களது பயிற்சி முகாம்களையும் முற்றிலும் அழித்தொழிக்கும் இலக்குடன் இந்தியா மேற்கொண்ட 'சிந்தூர்' ராணுவ நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என பிரதமர் நரேந்திர மோடியும், இந்திய முப்படைகளின் உயர் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவுடன் செயல்படும் பயங்கரவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு பயங்கரவாதிகள் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என பிரதமர் மோடி சூளுரைத்தார். அதோடு, இது விஷயத்தில் முப்படைகளும் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு அவர் அனுமதியும் அளித்தார். இதையடுத்து, நமது ராணுவத்தினர் நீண்ட ஆலோசனைகள், திட்டமிடலுக்குப் பிறகு, அண்மையில் நடத்திய அதிதுல்லியத் தாக்குதலில் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலுள்ள பயங்கரவாதிகளின் பயிற்சி முகாம்கள் அழிக்கப்பட்டன. இந்த ராணுவ நடவடிக்கையில் முக்கிய பயங்கரவாதிகள் சிலரும் கொல்லப்பட்டனர்.

இந்திய ராணுவத்தினர் மிகவும் கட்டுக்கோப்பாக பயங்கரவாதிகளின் இலக்குகளை மட்டுமே குறிவைத்து தாக்குதல் நடத்தினர். இந்த நடவடிக்கையால் ஆக்கிரமிப்பு காஷ்மீர், பாகிஸ்தானில் உள்ள பொதுமக்கள் எவரும் பாதிக்கப்படவில்லை. ஆனால், பயங்கரவாதிகளுக்கு வெளிப்படையாக பெரும் ஊக்கமும், ஆதரவும் அளித்து வரும் பாகிஸ்தான் ராணுவமோ, இந்திய எல்லைப் பகுதிகளில் வசித்து வரும் அப்பாவி மக்களைக் குறிவைத்து ஆளில்லா ட்ரோன்கள், பீரங்கிகள், ஏவுகணைகளைக் கொண்டு கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதல்களை இந்திய ராணுவத்தினர் வெற்றிகரமாக முறியடித்தனர். இருப்பினும், பாகிஸ்தான் ராணுவத் தாக்குதலில் இந்திய எல்லைக் கிராமங்களில் வசித்து வந்த அப்பாவி மக்கள் 15-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான இந்த மோதல் போக்கு முழு அளவிலான போராக வெடிக்கக் கூடும் என்ற அச்சம் மேலோங்கிய நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் திடீரென வெளியிட்ட அறிவிப்பு பெரும் சர்ச்சைக்கு வித்திட்டுள்ளது.



அமெரிக்கா நடத்திய தொடர் பேச்சுவார்த்தையால், இந்தியாவும், பாகிஸ்தானும் சண்டையை நிறுத்த ஒப்புக்கொண்டதாக அவர் அறிவித்தார். அதோடு, தன்னுடைய முன்முயற்சியால்தான் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே அணு ஆயுதப் போர் மூளாமல் தடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

காஷ்மீர் விவகாரத்தைப் பொருத்தவரையில், எந்தவொரு நாட்டின் மத்தியஸ்தத்தையும் ஏற்பதில்லை என்பதுதான் இந்தியாவின் நீண்டகாலக் கொள்கையாக உள்ளது. இந்தக் கொள்கையைச் சீர்குலைக்கும் வகையில், சண்டை நிறுத்த அறிவிப்பை ட்ரம்ப் வெளியிட்டது பல்வேறு சந்தேகங்களுக்கு வித்திட்டுள்ளது. மேலும், இந்தியா, பாகிஸ்தானுடனான வர்த்தகத்தை அமெரிக்கா நிறுத்திவிடும் என எச்சரித்ததால்தான் இரு நாடுகளும் சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டதாகவும் அவர் பேட்டி அளித்துள்ளார்.

இத்துடன், ஆயிரம் ஆண்டு கால காஷ்மீர் பிரச்னைக்கு தான் மத்தியஸ்தம் செய்யத் தயார் என்றும் மனம்போன போக்கில் ட்ரம்ப் அறிவித்தார். பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியா சுதந்திரமடைந்த 1947-ஆம் ஆண்டில்தான் பாகிஸ்தான் என்ற நாடே உருவானது. இந்தச் சாதாரண விஷயத்தைக்கூட அறியாமல், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே ஆயிரம் ஆண்டுகளாக காஷ்மீர் பிரச்னை நிலவுவது போல அவர் கூறியது நகைப்புக்குரியது.

அமெரிக்காவின் அதிபராக இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்றதிலிருந்து ட்ரம்ப் அதிரடியாக பல அறிவிப்புகளை வெளியிட்டு வந்தார். கனடாவை அமெரிக்காவின் புதிய மாகாணமாக இணைத்துக் கொள்ளப் போவதாகவும், டென்மார்க்கின் கட்டுப்பாட்டில் உள்ள கிரீன்லாந்து தீவை விலைக்கு வாங்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோல, ரஷ்யாவுடன் போர் நிறுத்தம் மேற்கொள்ள உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கியை நேரடியாக மிரட்டும் விதத்திலும் ட்ரம்ப் செயல்பட்டார். அவரது இந்தச் செயல்பாடுகளுக்கு சம்பந்தப்பட்ட இந்த நாடுகளின் தலைவர்கள் உரிய பதிலடி கொடுத்த பிறகுதான், அவர் தனது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கினார்.

பாகிஸ்தான் ராணுவத்துக்கு எதிராகவோ, அந்த நாட்டு மக்கள் பாதிக்கும் வகையிலோ இந்தியா நேரடியாக போரில் இறங்கவில்லை. பாகிஸ்தான் ராணுவம், அதன் ஐஎஸ்ஐ உளவு அமைப்பால் ஊக்குவிக்கப்படும் பயங்கரவாதிகளை ஒடுக்கும்விதத்தில்தான் இந்தியா ராணுவ நடவடிக்கையில் இறங்கியது. இந்த இலக்கை முழுமையாக எட்டுவதற்குள் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தடாலடியாக சண்டை நிறுத்த அறிவிப்பை வெளியிட்டார்.

டிரம்ப்பின் இதுபோன்ற அடாவடியான செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலான உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். பாகிஸ்தானுக்கு எதிராக மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருமித்த ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, பாகிஸ்தான் விஷயத்தில் இந்தியர்கள் அனைவரும் ஒன்றுபட்டு இருப்பதை ட்ரம்ப் போன்ற உலகத் தலைவர்களுக்கு உணர்த்த வேண்டிய அவசர அவசியத் தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி, பாகிஸ்தான் விஷயத்தில் பிற நாடுகளின் தலையீட்டை இந்தியா ஒருபோதும் ஏற்காது என்பதை தெள்ளத் தெளிவாக அறிவிக்க வேண்டும். இது தொடர்பான தீர்மானத்தை எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்ற வேண்டும்.

இத்தகைய நடவடிக்கையின் மூலமே ட்ரம்ப் போன்ற உலகத் தலைவர்களின் தலையீட்டைத் தடுத்து, நமது நாட்டின் இறையாண்மையை நிலைநிறுத்த முடியும்.

(தினமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் காணிகளைக்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். மறு புறத்தில் அமைச்சர் சந்திரசேகரன் இப்பிரச்சினையை பூசிமெழுக இம்மாவட்டங்களிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழமை போலவே வாய்மூடி மௌனிகளாக உள்ளனர்.

காணிகளைக் கையகப்படுத்துதல் தொடர்பான அரசாங்கத்தின் இத்தகைய முயற்சிகளினால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகள் தொடர்பாக தமிழ் மக்கள் அறிவூட்டப்படுவது அவசியமாகும். பிரச்சினை தன்வீட்டு முற்றத்துக்கு வந்தபின் ஒவ்வொருவரும் உணர்வதாலும் செயற்படுவதாலும் எதுவும் ஆகப்போவதில்லை. இப்போது கரையோரத்துக்கு வந்த ஆபத்து உள்ளூருக்குள் வருவதற்கு அதிகநாட்கள் செல்லப்போவதில்லை. போதாக்குறைக்கு தம்மிடம் மூன்றிலிரண்டு அறுதிப் பெரும்பான்மை உள்ளது என ஜனாதிபதி தற்போது அச்சுறுத்தல் விடுக்கத் தொடங்கியுள்ளார். விளிப்பே முதற்படி. இவ்விடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் வழமையான வேறுபாடுகளைப் புறமொதுக்கி ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். சமூகத் தலைவர்கள், மதத்தலைவர்கள் போன்றவர்களும் இவ்விடயத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இது வெறும் சட்டப்பிரச்னையல்ல. இந்நாட்டில் தமிழ் மக்களின் எதிர்கால இருப்புத் தொடர்பான அரசியல் பிரச்சினை. அதனால் அரசியல் ரீதியாகவே முகங்கொடுக்க வேண்டும். மக்கள் போராட்டங்கள் மூலம் அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலமே அரசாங்கத்தை வழிக்குக் கொண்டுவர முடியும். ●

# தங்காலையில் பஸ் விபத்து ஒருவர் பலி, பலர் காயம்



தங்காலை, மே 25

கொழும்பு - வெள்ளவாய பிரதான வீதியில் வெலிஹார பகுதியில் மட்டக்களப்பிலிருந்து காலி நோக்கிப் பயணித்த இ. போ. சவுக்கு சொந்தமான பேருந்து ஒன்று, முன்னால் சென்றுகொண்டிருந்த டிப்பரின் பின்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று அதிகாலை 02. 45 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டதாகவும் இதில் பேருந்தில் பயணித்த 12 பயணிகளும் டிப்பர் சாரதியும் காயமடைந்து தங்காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் பயணி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

விபத்து தொடர்பில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையை...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிடத்தை மக்களினால் தெரிவு செய்யப்படும் மாகாண சபைகளினால் நிரப்பக்கூடியதாக இருக்கும்.

மாகாணசபைகளை மத்திய அரசாங்கம் தனக்கு ஒரு போட்டியாக இல்லாமல் பங்காளியாக கருதி ஊடாட்டங்களைச் செய்தால் அந்த வெற்றிடத்தை நிரப்புவது சாத்தியமாகும். மாகாணசபை தேர்தல்கள் தொடர்ச்சியாக தாமதிக்கப்படுகின்றன. ஆறு வருடங்களுக்கும் மேலாக அந்த தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பது அதிகாரப்பரவலாக்கல் உறுதிமொழியை மலினப்படுத்துகிறது. அதிருப்தியை தூண்டுவதாகவும் அது இருக்கிறது.

மாகாணசபைகள் இயங்காவிட்டால், அதிகாரப்பகிர்வுக்கான அடிப்படையாக விளங்கும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை பயனுறுதியுடைய முறையில் ஒருபோதும் நடைமுறைப்படுத்த முடியாது. இந்த தேர்தல்கள் காலதாமதமின்றி நடத்தப்படுவதையும் மாகாண ஆட்சிமுறைக் கட்டமைப்புக்களுக்கு புத்துயிரளிக்கப்பட்டு வலுவூட்டுவதையும் அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களையும் பரவலாக்கம் செய்து 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும். அதைவிடுத்து முன்னைய அரசாங்கங்கள் செய்ததைப் போன்று அந்த திருத்தத்தின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதன் மூலம் அரசியலமைப்பை உறுதியாகப் பின்பற்றாமல் தற்போதைய அரசாங்கமும் நடந்து கொள்ளக்கூடாது.

நல்லிணக்கம் தொடர்பான தேசியக் கொள்கை ஒன்றை புதிதாக வரைந்து கருத்தொருமிப்பின் அடிப்படையில் அங்கீகாரத்தைப் பெறும் நோக்குடன் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு விடுவதே அரசாங்கத்தின் தந்திரோபாயமாக தெரிகிறது. இந்த விவகாரத்தை ஒரு கணிசமான காலம் ஆராய்ந்து யோசனைகளை முன்வைக்கக்கூடிய நிபுணர் குழுக்களின் வழிகாட்டலின் கீழ் முன்னோக்கிச் செல்வதில் அரசாங்கத்துக்கு இருக்கும் விருப்பத்தை இது பிரதிபலிக்கிறது. ஆனால், சிறுபான்மைச் சமூகங்கள் பதில்களுக்காக பல வருடங்களாக காத்திருந்துவிட்டன.

பல வருடங்கள் காலத்தை இழுத்தடித்து இறுதியில் அறிக்கைகள் அலுமாரிகளுக்குள் மூடங்கிவிட்ட சர்வ கட்சி மகாநாடுகளையும் விசாரணை ஆணைக்குழுக்களையும் போன்ற நீண்ட செயன்முறைகள் மீது மக்களுக்கு இப்போது நம்பிக்கை கிடையாது. கடுமையான அளவுக்கு துருவமயப்பட்டுவிட்ட ஒரு சூழ்நிலையில், அறிக்கைகளின் நடைமுறைப்படுத்தலை பாராளுமன்றத்தில் கருத்தொருமிப்பைக் காண்பதில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளுடன் தொடர்புபடுத்துவது திட்டமிட்டே தாமதிப்பதற்கு ஒப்பானதாகும். ஆறு மாதங்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டு மக்களினால் வழங்கப்பட்ட ஆணையை கையில் எடுத்து அரசாங்கம் இன்று செயலில் இறங்குவதே அவசியமானதாகும். ●

# நிழலின் அருமையும்...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணங்களில் உச்சி வெயில் ஊடுருவிச் சூடும் சுவையும் கூட்டுகிற பாங்கைப் பெரியவர்கள் அனுபவித்த அளவுக்கு இப்போதைய தலைமுறை அறிய வழியில்லை.

பல நாட்கள் வீட்டுக்குள்ளேயே வைத்துப் புழுக்கம் ஏறிய பழம்பொருட்களைப் பாதுகாக்கக் கோடை வெயிலில் உலர்த்திப் பேணுவது உண்டு. பருத்தி ஆடையைத் துவைத்து உலர்த்தும்போது படியும் சூரியக் கதிர் வெப்பம், தீய கிருமிகளை விரட்டுவதோடு, தோலுக்குத் தேவையான வைட்டமின்களையும் தருகிறது.

மின்சாரம் வந்த பிறகு, பௌர்ணமி நிலவின் அழகும் அமாவாசை இருளின் செறிவும் அறியப்படாது போயின. சுழலும் மின் விசிறிகள் வந்த பிறகு, தென்னை, பனை ஓலை விசிறிகள் காணாமல் போய்விட்டன. கதிரொளி படாத சுனையின் குளிர் நீரை, பிரிட்ஜ் பெட்டிகள் தருகின்றன. குளிரக் குளிரக் காற்று தரும் ஏ.சி. கருவிகள் மலிந்துவிட்டன. குளிர்சாதன வசதிகள் மிகுதியும் பெருகிவிட்டன. ஊரே ஏ.சி. போட்டதுபோல், குளிர்தரு நிழல் மரங்கள் நிறைந்து சுகம் தந்த நிலை மாறிவிட்டது. வீட்டுக்கு வீடு. ஏ.சி. விடுக்கும் வெப்பக்காற்றில் வீதிகள் கனல்கின்றன. கானல்நீர் ஓடும் கருந்தார்ச் சாலைகள் உருகிக் கனல்கின்றன. அனலும் புனலும் தருகிற மின்னாற்றல், அளவுக்கு அதிகமாய்ச் சூரிய வெப்பத்தில் கிடைக்கும் என்கிறார்கள். பற்பல இடங்களில் சூரிய மின் உற்பத்திக் கருவிகள் பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

நிழலே இல்லாத வெளிகளில் முளைக்கும் கான்கிரீட் காடுகள் மின்சாரத்தால் மட்டுமே உயிர்வாழ்கின்றன. சில மணி நேரங்கள் மின்சாரம் நின்றால் தெரியும், அதன் சீரிய உதவி.

பற்றாக்குறையில் தவிக்கும் நம்மைவிடவும் தகிக்கும் வெயிலில் இருந்து புவியைக் காப்பாற்றும் தாவரங்களை யாரே நினைக்க வல்லார்?

இன்றைக்கு? போதிய அளவுக்கும் கூடுதலான ஆற்றலை வாரிச் சொரியும் சூரிய வெயிலின் அருமையும் உணரப்படவில்லை என்பதற்குச் சான்று, 'கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்கிற சொலவடை. பருவம் அறிந்து பக்குவமாக நடந்துகொள்ளச் சொல்லும் நிழலின் அருமையையும், வெயிலின் பெருமையையும் அறிந்து பயன்கொள்வோம். ●

# மாகாணசபைகளும்...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த வாக்குகள் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியவாத அரசியல் இலட்சியத்தை கைவிடவில்லை என்பதை மீண்டும் நிரூபித்துவிட்டதாக தமிழ் அரசியல்வாதி கள் திருப்தியடைந்திருக்கிறார்கள். ஆனால், தமிழ்ப் பகுதிகளில் உள்ளூராட்சி சபை களை அமைப்பதில் அவர்களால் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு இன்னமும் வரமுடிய வில்லை. தமிழர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கக்கூடாது என்பதில் மாத்திரம் தான் அவர்களால் ஒன்றுபட்டு நிற்க முடிந் தது.

உள்ளூராட்சி தேர்தல்களுக்கு பிறகு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்களைச் சந்தித்த முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.ஏ. சுமந்திரன் வட மாகாண சபை தேர் தலில் தனது கட்சியின் சார்பில் முதல மைச்சர் வேட்பாளராக போட்டியிடுவ தில் தனக்கு இருக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

அது தொடர்பாக ஊடக சந்திப்பில் தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானத்திடம் செய்தியார்கள் கேட்ட போது மாகாணசபை தேர்தல்கள் எப் போது நடைபெறும் என்பதே தெரியாமல் இருப்பதால் முதலமைச்சர் வேட்பாளர் பற்றி பேசுவது அவசியமற்றது என்று அவர் பதிலளித்தார். மாகாணசபை தேர்தலைப் பற்றிக் கூட பேச வேண்டாம் என்றும் அவர் செய்தியாளர்களிடம் கேட்டுக்கொணடார்.

யாழ்ப்பாணத்தில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு கடந்த வாரம் நேர்காணல் ஒன்றை வழங்கிய சிறீதரனிடமும் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவது குறித்து சுமந்திரன் வெளியிட்ட விருப்பம் தொடர்பாக கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர் சுமந்திரன் பற்றி சில விமர்சனங்களை முன்வைத்ததுடன் மாகாணசபை தேர்தல்கள் விரைவில் நடத்தப்படக்கூடிய வாய்ப்பு இல்லை என்றும் கூறினார். எல்லை நிர்ணயம் தொடர்பிலான [illegible] ஒரு காரணமாகவும் சொன்னார்.

முதலமைச்சராக யார் போட்டியிடுவது என்பது தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பிறகு தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம். ஒரு அரசியல்வாதி என்ற வகையில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு சுமந்திரன் விரும்புவதிலும் தவறில்லை. தமிழரசு கட்சி தற்போது அவரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகின்ற நிலையில், அவருக்கு எதிராக அனேகமாக சகல தமிழ்க் கட்சிகளும் செய்த படுமோசமான பிரசாரங்களுக்கு மத்தியிலும் வடக்கில் குறிப்பாக குடாநாட்டில் மக்கள் தமிழரசு கட்சிக்கே கூடுதலாக வாக்களித்திருக்கிறார்கள். அதனால், அவர் மீதான வெறுப்புப் பிரசாரங்களை தமிழ் மக்கள் தற்போது எவ்வாறு நோக்குகிறார்கள் என்ற ஒரு கேள்வி எழுகிறது. உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ ரசு கட்சிக்கு கிடைத்த வெற்றி முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கலாம் என்ற நம்பிக்கையை சுமந்திரனுக்கு கொடுத்திருக்கலாம். அது வேறு விடயம்.

ஆனால், சிவஞானம் சிறீதரனும் செய்தியாளர்கள் சுமந்திரன் தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோது தேர்தல்கள் தற்போதைக்கு நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லை என்று கூறுவதை விடுத்து முதலமைச்சர் வேட்பாளர் பிரச்சினைக்கு அப்பால் மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்தவேண்டும் என்று அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுப்போம் என்றுதான் கூறியிருக்க வேண்டும். அத்தகைய அரசியல் பக்குவத்தை அவர்கள் வெளிப்படுத்தவில்லை. தனிப்பட்ட ஆளுமை மோதல்களுக்கு அப்பால் மக்களின் நலன்களில் அக்கறை காட்டும் மனோபாவம் பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகளிடம் கிடையாது.

தங்களுக்கு விருப்பம் இல்லாதவர்கள் பதவிக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்றால் மாகாண சபை தேர்தல்களே வேண்டாம் என்றுகூட எமது அரசியல்வாதிகள் கூறிவிடுவார்கள் என்று அல்லவா எண்ண வேண்டியிருக்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உகந்தைமலை...

முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதே சூழலில் இந்த புத்தர் சிலை எவ்வாறு வைக்கப்பட்டது?", என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். கதிர்காமம் போல் உகந்தை மலையையும் மாற்றுவதற்கு திட்டமிட்ட சதி நடக்கிறதா? என்றும் இந்து மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (எ)

## 16 ஆண்டுகளின்...

இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது 16 ஆண்டுகளுக்குப் பிறகு, 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து ஒரு பெரிய சிக்குன் குனியா பரவலை எதிர்கொண்டு வருகிறது.

தற்போது பரவி வரும் சிக்குன்குனியா வைரஸ் பிறழ்வின் முழு மரபணு ஆய்வை நாம் மேற்கொண்டோம்.

மேலும் அது தெற்காசியாவில் தற்போது பரவி வரும் பிறழ்வை போலவே, இந்து சமுத்திர பரம்பரையைச் சேர்ந்தது என்பதைக் கண்டறிந்துள்ளோம்.

இந்த புதிய பிறழ்வுகளில் சில, முன்னர் வகைப்படுத்தப்படாததால், அவை கொசுக்களுக்குள் உடற்தகுதி, வைரஸ் பிரதிபலிப்பு மற்றும் நோயெதிர்ப்புத் தவிர்ப்பை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் கண்டறிவது முக்கியமானதாகும்-என்றார். (அ)

## வைத்தியசாலை...

இந்த கொள்வனவு செயன்முறைக்கு கால அவகாசம் தேவைப்படும்.

இந்த வருடத்தின் பயன்பாட்டுக்கான மருந்துகளில் 67 வகையான மருந்துகளுக்கு மாத்திரமே கடந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் முந்தைய அரசாங்கம் பொருட்கோடலை சமர்ப்பித்திருந்தது.

முறையாக, மருந்து கொள்வனவு செயன்முறையை முன்னெடுக்காதமையினால் ஏற்பட்ட பின்விளைவுகளையே தற்சமயம் வைத்தியசாலைகளில் சந்திக்க நேரிட்டுள்ளது.

சர்வதேச சுகாதார அளவுகோல்களின் அடிப்படையில் இலங்கைக்கு ஓர் உயர்வான இடம் உள்ளது. அதனைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையிலிருந்து, 2 வருட ஒப்பந்த அடிப்படையில் தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு குவைத் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது - என்றார். (அ)

## மூவின மக்களின்...

அரசு நடக்கவேண்டும். இதை மீறி நடந்த கடந்த ஆட்சியாளர்களுக்கு மக்கள் புகட்டிய பாடத்தை எவரும் மறக்கமாட்டார்கள்.

அந்தவகையில் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சி , மக்களின் அமோக ஆணையுடன் ஆட்சிக்கு வந்தது. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நாம் செயல்படுகின்றோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகின்றோம்.

இந்நிலையில், குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க எதிரணியினர் பகல் கனவு காண்கின்றனர். பகல் கனவு ஒருபோதும் நனவாகாது என்பதை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்திக்குள் குழப்பம் என்றும், எமது ஆட்சி கவிழப் போகின்றது என்றும் எதிரணியினருக்குச் சார்பான ஊடகங்கள் செய்திகள் வெளியிடுகின்றன. இந்த வதந்திச் செய்திகளை நம்பும் அளவுக்கு மக்கள் முட்டாள்கள் அல்லர். ஊடகங்கள் நடுநிலையுடன் செயல்படவேண்டும். இது தேசிய மக்கள் சக்தி அரசு. மூவின மக்களாலும் உருவாக்கப்பட்ட அரசு.

எனவே, எந்தவொரு சூழ்ச்சியாலும், வதந்திச் செய்திகளாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது - என்றார். (அ)

## உப்பு...

தொன் உப்பு நாட்டுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இயந்திரமயமாக்கப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் உப்பு உற்பத்தி செய்வது குறித்து உரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## இந்த அரசையும்...

இந்த அரசாங்கம் முன்னோக்கிச் செல்லக்கூடிய அரசாங்கமாக தென்படவில்லை. அனுபவம் அற்ற இந்த அரசாங்கம் எவ்வித திட்டங்களும் இன்றி செயல்பட்டு வருகிறது. இந்த அரசாங்கத்தால் ஆட்சி செய்ய முடியவில்லை என நாம் கூறவில்லை. அரச அதிகாரிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் இதனைக் கூறுகின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## ஜனாதிபதியின்...

பொறுப்புக்கூறல் குறித்து ஜேர்மனியின் அதிகாரிகள் கேள்வி எழுப்ப உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது விஜயத்தின்போது ஜேர்மன் வெளிவிவகார அமைச்சரையும் பாதுகாப்பு அமைச்சரையும் சந்திப்பார். ஜேர்மன் சான்சிலர் பிரெட்ரிச் மேர்சினை ஜனாதிபதி சந்திக்கமாட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## நீர்கொழும்பில்...

இந்நிலையில் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது.

அதேவேளை நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மண்டபத்துக்குள் நடந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து பொதுவெளியில் சுடர் ஏற்றுவதற்கு ஆயத்தமாக இருந்த வேளை சிங்களராவய அமைப்பினரின் அச்சுறுத்தல் விடுத்தனர் எனக் கூறப்பட்டது. (அ)

## கொழும்பு மாநகர...

தேசிய மக்கள் சக்தியே அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. எனவே, தேசிய மக்கள் சக்தியே கொழும்பு மாநகர சபையை ஆளும்.

இதேவேளை, அங்கு பல கட்சிகள், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு நேரடியாக ஆதரவைத் தெரிவித்தும் வருகின்றன. முதலாவது சபை அமர்வில் தேசிய மக்கள் சக்தியின் மேயர் பதவியேற்பார்.

இந்நிலையில், கொழும்பு மாநகர சபையில் தாம்தான் ஆட்சி அமைப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் வீரவசனம் பேசி வருகின்றனர்.

சஜித் அணியினரின் இந்த வீரவசனம் செல்லுபடியாகாது. கடந்த மூன்று தேர்தல்களிலும் இப்படித்தான் அவர்கள் வீரவசனம் பேசி படுதோல்வியடைந்தனர்- என்றார். (அ)

## வினைத்திறனை...

ஆலோசனைகள் இடம்பெற்று வருகின்றன.

அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அரச நிறுவனங்களின் உயர் பதவிகளிலும் பல்வேறு அதிரடி மாற்றங்களை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இது தொடர்பான கோரிக்கைகளை அரசாங்கத்தின் மூத்த அமைச்சரான பிமல் ரத்நாயக்க உட்பட பலர் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் முன்வைத்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் 25இற்கும் குறைவான அமைச்சர்களுடனேயே இயங்கும் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கூறியிருந்தார்.

என்றாலும், 22 அமைச்சர்களுடனேயே அமைச்சரவை செயல்படுகிறது. இன்னமும் 3 அமைச்சர்கள் வரை நியமிப்பதற்கான சந்தர்ப்பம் அரசாங்கத்துக்கு உள்ள சூழலிலேயே அமைச்சரவை மாற்றம் குறித்த ஆலோசனைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# நல்லூரில் பன்னாட்டு உணவகத்தை மூட நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## வடக்கு ஆளுநரிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 25

நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலில் எந்தவோர் அனுமதியும் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள பன்னாட்டு நிறுவனத்துக்கு எதிராக அதனை மூடுவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும், சட்டவிரோத உணவகம் அமைக்கப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்காத யாழ். மாநகர சபையின் செயற்பாடு தொடர்பில் விசாரணைக் குழு அமைக்குமாறும் நல்லை சிவகுரு ஆதீனம் தவத்திரு வேலன் சுவாமிகள் தலைமையில் யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அகில இலங்கை சைவ அர்ச்சகர் சபை, சைவ பரிபாலன சபை, அகில இலங்கை சைவ மகா சபை, சைவ வித்யா விருத்திச் சங்கம், இலங்கை சைவசமய பேரவை உட்பட்ட அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக இந்துகற்கைகள் பேராசிரியர், திருக்கேதீச்சரம் அறங்காவலர் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனைச் சந்தித்து வலியுறுத்தி மனுவைக் கையளித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும் தமிழ் சைவப்பேரவையினருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

முதல் கட்டமாக யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட நல்லூர் ஆலயச் சுற்றாடலில் மதுபானக் கேளிக்கை வர்த்தக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படக் கூடாது எனவும் அதை சிவபுண்ணிய பிரதேசமாக மாநகர சபை வர்த்தமானி ஊடாக அறிவிப்பதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரினர். இதையே ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் பின்பற்றி தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள ஆலய நிர்வாகங்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதற்குரிய அறிவுறுத்தல்களையும் வழங்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

மேலும் மேற்படி உணவகம் பன்னாட்டு நிறுவனம் என்ற அடிப்படையில் இலங்கையின் சட்டம் தொடர்பாக முழுமையாக அறிந்து வைத்திருப்பார்கள் எனவும், அவர்கள் நல்லூரில் தமது நிறுவனத்தின் கிளையை எந்தவோர் அனுமதியையும் பெற்றுக்கொள்ளாது திறந்தமை திட்டமிட்ட நடவடிக்கை எனவும் சுட்டிக்காட்டிய தமிழ்ச் சைவப் பேரவையினர், இது தொடர்பில் யாழ். மாநகர சபையின் அலுவலர்களுக்கு தொடர்பு உள்ளதா என்பது தொடர்பாகவும், அனுமதியற்ற வர்த்தக நிறுவனத்துக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பிலும் விசாரணைக் குழு அமைத்து விசாரணை முன்னெடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இளைய சமூகத்தை வழிப்படுத்தும் வகையில் அறநெறிக் கல்வியை கட்டாயமாக்குவதற்கான யோசனை தொடர்பிலும் தமிழ்ச் சைவப்பேரவையினர் சுட்டிக்காட்டினர். குறிப்பாக, 14 வயதுக்கு உட்பட்டோருக்கான அனைத்து தனியார் கல்வி செயற்பாடுகளையும் வெள்ளி மாலையும், ஞாயிறு மதியம் வரையிலும் மூடுவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரினர். அத்துடன் அறநெறி வகுப்புக்கு மாணவர்கள் செல்வதை உறுதிப்படுத்தி ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களின் அறநெறி வகுப்புக்கான வருகை மற்றும் செயற்பாடுகளை கட்டாயக் கல்வியின் ஒரு பகுதியாக இணைத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டது. சில பாடசாலைகளில் மாணவர்களை சைவச் சின்னங்கள் அணிந்து செல்வதை தடை விதிக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என ஆதாரங்களுடன் தமிழ்ச் சைவப்பேரவையினர் ஆளுநரிடம் முறையிட்டனர்.

தமிழ்ச் சைவப் பேரவையினரின் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# நிமோனியா காய்ச்சலால் முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணத்தில் நிமோனியா காய்ச்சல் காரணமாக முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பலாலி தெற்கு, வசாவிளான் பகுதியைச் சேர்ந்த கா. கிட்டுணன் (வயது-75) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் கடந்த சில தினங்களாக உடல் சுகயீனமடைந்த நிலையில் இருந்துள்ளார். இந்நிலையில் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். நிமோனியா காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# வாகரையை அடைந்த யாத்திரிகர்கள்



வாகரை, மே 25

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து புறப்பட்ட யாழ். கதிர்காமம் பாதயாத்திரிகர்கள் நேற்றுச் சனிக்கிழமை 24ஆவது நாளில் 4 மாவட்டங்களைக் கடந்து மட்டு. மாவட்டத்தின் வாகரையை அடைந்தனர்.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கடந்த மே மாதம் முதலாம் திகதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 23 தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய நான்கு மாவட்டங்களைக் கடந்து தற்போது மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் பிரவேசித்துள்ளனர்.

வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் வெள்ளிக்கிழமை பூஜையில் கலந்து கொண்ட குழுவினர் நேற்று வாகரையை அடைந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## துமிந்தவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, மே 25

சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான துமிந்த திஸநாயக்கவை எதிர்வரும் மே 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கல்கிசை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கல்கிசை பதில் நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பம்பலப்பிட்டி பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நேற்று முன் தினம் அவரை கைது செய்திருந்தனர்.

கடந்த 20 ஆம் திகதி வெள்ளவத்தை - ஹெவ்லொக் சிற்றி அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்த 2 பெண்களிடம் இருந்து குறித்த துப்பாக்கி மீட்கப்பட்ட நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதனடிப்படையிலேயே, தங்க முலாம் பூசப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியுடன் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்கவுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸநாயக்க கடந்த சில நாட்களுக்கு முன்னர் தமது சமையல்காரரின் மூலம் அந்தத் துப்பாக்கியை ஹெவ்லோக் சிற்றி அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் தமது நண்பரின் வீட்டுக்கு அனுப்பியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## கனமழை பெய்யக்கூடும்

கொழும்பு, மே 25

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் பல பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பானது இன்று பிற்பகல் 2 மணி வரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், நாட்டின் தென்மேற்குப் பகுதிகளிலும் அடுத்த சில நாட்களுக்கு தொடர்ந்து மழை பெய்யக்கூடும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வடக்கு, வடமத்திய, வடமேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாதாள குழுக்களுடன் தொடர்புடைய எம்.பி.களின் பெயரை வெளியிடுங்கள்

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



கொழும்பு, மே 25

பாதாள உலக குழு அங்கத்தவர்களுடன் தொடர்பு கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களை அறிய ஆவலாக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சித்ரலால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் கூற்றுக்கமைய உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்களை தவிர ஏனைய அனைவரும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களுடன் தொடர்புள்ளவர்கள் என்றே கருதவேண்டியுள்ளது.


நாங்கள் ஆயுதங்களை கையிலெடுத்தவர்கள் அல்லர்.

ஆயுதங்களை வைத்திருந்தவர்களே இன்று அவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்றனர். அந்தப் பட்டியலுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

ஆளும் தரப்பினர் வாய்க்கு வந்தபடி எதையாவது கூறுகின்றனர். பட்டியல் வெளியானால் பிரச்னை தீர்ந்து விடும் - என்றார். (அ)

# தமிழின அழிப்பு நினைவகம் ஒன்றை றொறன்ரோ நகரில் அமைக்க முடிவு!

## நகர சபையில் தீர்மானம் நிறைவேற்றம்



றொறன்ரோ, மே. 25

**தமிழின அழிப்பு நினைவகம் ஒன்றை கனடாவின் றொறன்ரோ நகரத்தில் அமைப்பதற்கான தீர்மானம் றொறன்ரோ நகர சபையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.**

ஸ்கார்புரோ தென்மேற்கு தொகுதி நகரசபை உறுப்பினர் பார்த்தி கந்தவேள் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார்.

றொறன்ரோவில் தமிழின அழிப்பு நினைவகம் ஒன்றை அமைப்பதற்கு தமிழ் சமூகத்துடன் இணைந்து றொறன்ரோ நகரசபை பணியாற்ற இந்தத் தீர்மானம் கோரப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை நகரசபை உறுப்பினர் ஜோஸ் மெற்லோ வழிமொழிந்தார்.

தனது தீர்மானத்தை றொறன்ரோ நகர சபை ஏகமனதாக நிறைவேற்றியதில் பெருமை கொள்வதாக வாக்கெடுப்பின் முடிவில் பார்த்தி கந்தவேள் தெரிவித்தார்.

இந்த தீர்மானத்தை ஏகமனதாக ஆதரித்த நகர முதல்வர் ஒலுவியா சோ உட்பட ஏனைய நகரசபை உறுப்பினர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இந்த நினைவகம் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை ஒருபோதும் மறைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் என பார்த்தி கந்தவேள் நம்பிக்கை தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகளவில் வசிக்கும் ஸ்கார்புரோவில் இந்த நினைவகம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வரி விதிப்பு குறித்து கலந்துரையாட இலங்கை தூதுக்குழு வாஷிங்டனுக்கு!

கொழும்பு, மே 25

அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் அழைப்பின் அடிப்படையில், வாஷிங்டன், டீ.சீ.யில் நடைபெறும் வரி விதிப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் இலங்கை தூதுக்குழு பங்கேற்கவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை நோக்கமாகக் கொண்ட இரண்டாவது நேரடிச் சந்திப்பு இதுவாகும்.

அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் மற்றும் இலங்கையின் தொடர்புடைய அதிகாரிகளுக்கு இடையில் நடைபெற்ற பல கட்ட இணையவழி கலந்துரையாடல்கள் மூலம் இந்த நேரடி சந்திப்புக்குத் தேவையான பின்னணி உருவாக்கப்பட்டதுடன், இது பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கான இரு நாடுகளினதும் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

தற்போதைய பொருளாதார முன்னுரிமைகளைக் கருத்தில் கொண்டு, வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளை ஆராய்தல் மற்றும் இலங்கைக்கு நன்மை பயக்கும் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளல் இந்தக் கலந்துரையாடல்கள் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஜயத்துக்கு முன்னதாக, நாட்டின் நலன்கள் நன்கு பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் உயர்மட்ட அதிகாரிகள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எதிர்வரும் பேச்சுகளில் நல்ல பலன்களை எட்டுவதற்கு கவனம் செலுத்த வேண்டிய பொருளாதார உத்திகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.எம். எம்.சிறிவர்தன, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கே.ஏ. விமலேந்திர ராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ, சட்டமா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நிர்மல் விக்னேஷ்வரன் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி தர்ஷன பெரேரா ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர். (அ)

## போதைப்பொருட்களுடன் 475 சந்தேகநபரகள் கைது

கொழும்பு, மே 25

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, போதைப் பொருட்களுடன் 475 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹெரோயின் போதைப்பொருளுடன் 178 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 131 பேரும் கஞ்சா போதைப்பொருளுடன் 158 பேரும் மதனமோதக போதைப்பொருளுடன் 3 பேரும் கஞ்சா செடிகளுடன் 5 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 208 கிராம் 870 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 289 கிராம் 962 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் ஒரு கிலோ 118 கிராம் 761 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருளும் 26 கிராம் 400 மில்லி கிராம் மதனமோதக போதைப்பொருளும் 9 ஆயிரத்து 72 கஞ்சா செடிகளும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

## "பூஸா சிறைக்குள் தடை செய்யப்பட்ட பொருட்கள் மீட்கப்பட காரணம் என்ன?"

கொழும்பு, மே 25

பூஸா சிறைச்சாலையிலிருந்து தடை செய்யப்பட்ட பொருட்கள் மீட்கப்பட காரணம் என்ன என சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சட்டத்தரணி சேனக பெரேரா கேட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் பேசிய அவர், "பூஸா சிறைச்சாலை அதி உச்ச பாதுகாப்பு வாய்ந்த சிறைச்சாலையாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே வேறு சிறைச்சாலைகளைப் பார்க்கிலும் இந்த சிறைச்சாலை வேறுபட்டதாகக் காணப்படவேண்டும். ஆனாலும்கூட இந்த சிறைச்சாலையில் தடை செய்யப்பட்ட பொருட்கள் மீட்கப்படுகின்றன. இந்த விடயம் எவ்வாறு இடம்பெறுகின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது.

"இவை அனைத்துக்கும் அதிகாரிகள் சிலருக்கும் இடையில் தொடர்பு உள்ளது. அதன் காரணமாகவே இத்தகைய விடயங்கள் இடம்பெறுகின்றன. விசேட கைதிகளை வைத்திருக்கும் சிறைச்சாலையாகவே இந்த சிறைச்சாலை பார்க்கப்படுகின்றது. ஆனால் அவ்வாறாக சட்டத்துக்கு இணங்கவா அங்கு குறித்த விடயங்கள் இடம்பெறுகின்றன", என்று கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org